விலை: 50.00
பக்கங்கள் : 16
website : www.valampurii.lk
viber : 076 636 3378
Registered as a Newspaper in Srilanka

# வலம்புரி
Valampurii

E-mail: valampurii@yahoo.com
சங்கு 24
ஒலி 364 வள்ளுவர் ஆண்டு 2054 மார்கழி 02 திங்கட்கிழமை (18.12.2023) தொலைபேசி 222 3378, பக்ஸ் 222 7829

கல்யாண மாலை
சர்வதேச இலவச திருமண சேவை

T.P: 021 720 1005
இல.144, பிறவுண் வீதி, யாழ்ப்பாணம்.
kalyanamalai.jaffna@gmail.com
4000/=

## 14 இந்திய மீனவர்கள் காரைநகரில் கைது

(சென்னை)

தமிழ்நாடு காரைக்காலைச் சேர்ந்த 14 மீனவர்கள் நேற்று ஞாயிற்றுக்கிழமை காரைநகர் கோவளம் கடற்பரப்பில் வைத்து எல்லை தாண்டி மீன் பிடித்ததாக இலங்கை கடற் படையால் கைது செய்யப் பட்டு காங்கேசன்துறை கடற் படைத் தளத்திற்கு அழைத் துச் செல்லப்பட்டு நீரியல் வளத் திணைக்கள அதிகாரி களிடம் கையளிக்கப்பட் டுள்ளனர். (ந-7,33,60)

## 'சரிகமப' இசை நிகழ்ச்சியில் மகுடம் சூடினார் கில்மிசா



(சென்னை)

இந்தியாவில் உள்ள சீ (Zee) தமிழ் தொலைக்காட்சியில் இடம்பெற்றுவரும் சரிகமப இசை நிகழ்ச்சியில் பங்குபற்றிய யாழ்ப்பாணத்து மாணவி செல்வி உதயசீலன் கில்மிசா முதலாம் இடத்தில் வெற்றி பெற்று மகுடம் சூடியுள்ளார்.

அவரின் வெற்றி ஈழத் தமிழ் மக்களுக்கு வரலாற்றுப் பெருமையைத் தேடித் தந்துள்ளது.

சீ தமிழ் தொலைக்காட்சியில் தொடர் நிகழ்ச்சி 15

# வலுப்பெறுகிறது ஐ.ம.சக்தி

# சஜித் தலைமையில் கூட்டணி



- ஐக்கிய மக்கள் சக்தியில் சங்கமித்தார் பீரிஸ்.
- ஜனாதிபதி வேட்பாளராக சஜித்தை நிறுத்தத் திட்டம்

ஆளும் கட்சியுடனான முரண்பாடுகள் மற்றும் அதிருப்தி காரணமாக முக்கிய அரசியல் தலைவர்கள் உட்பட பாராளு மன்ற உறுப்பினர்கள் பலர் தற்போது பிரதான எதிர்க்கட்சி யாகவுள்ள ஐக்கிய மக்கள் சக்தியுடன் இணையவுள்ளனர்.

அத்துடன் எதிர்வரும் ஜனாதி பதித் தேர்தலில் எதிரணியின் சார்பில் பொது வேட்பாளராக சஜித் பிரேம தாஸவை நிறுத்துவதற்கும் கலந் துரையாடல்கள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

இதேவேளை பாராளுமன்ற உறுப் பினர் டலஸ் அழகப்பெரும தலைமை யிலான "சுதந்திர மக்கள் பேரவை"யின் முக்கிய 15

## சீனாவின் ஆய்வுக் கப்பலை அனுமதிக்காதீர்

இந்தியா கோரிக்கை



3ஆம் பக்கம் பார்க்க

## வடக்கில் வெள்ள அனர்த்தம்

வான்பாய்கின்றன குளங்கள்



2ஆம் பக்கம் பார்க்க

## காக்கைகளும் மைனாக்களும் மீளெழுக் கடும் பிரயத்தனம்

### எதிர்க்கட்சித் தலைவர் காட்டம்

(கொழும்பு)


15 இல் இருந்து 18 வீத மாக வற் வரியை அதிகரித்து நாட்டையே வங்குரோத்தாக் கிய ஜனாதிபதியின் எடுப்பிடி களும் 7 மூளைகளை கொண்ட காக்கைகளும் மைனாக் களும் மீண்டும் எழுச்சி பெறக் கடும் பிரயத்தனம் எடுத்து வருவ தாக எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ தெரிவித் தார்.

ஐக்கிய மக்கள் சக்தி, ஏனைய கட்சிகளைப் போல் ஊடகங்களில் கோப்புகளைக் காட்டி போலி அரசியல் செய் யாது.

நாட்டை வங்கு 15

## ஜனாதிபதித் தேர்தலே முதலில் நடைபெறும்

### ரணில் விக்கிரமசிங்க அறிவிப்பு



(கொழும்பு)

ஜனாதிபதித் தேர்தலை முதலில் நடத் துவதா? அல்லது பொதுத் தேர்தலை முதலில் நடத்துவதா? என்பது சம்பந்த மாக அரசாங்கத்திற்குள் இருந்து வந்த கருத்து முரண்பாடுகளை முடிவுக்குக் கொண்டு வரும் 15

## மட்டுவிலில் சுற்றிவளைப்பு வாளுடன் இளைஞன் கைது

(சாவகச்சேரி)

சாவகச்சேரி பொலிஸ் பிரி வுக்குட்பட்ட மட்டுவில் பகுதி யில் நேற்று முன்தினம் வாளு டன் நடமாடிய 21 வயதான இளைஞன் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார்.

குறித்த பகுதியில் வாள் களுடன் குழுவொன்று வீதியில் நிற்பதாக சாவகச்சேரி பொலி ஸாருக்கு கிடைத்த தகவலின் அடிப்படையில் விசேட சுற்றி வளைப்பை பொலிஸார் மேற் கொண்டிருந்தனர்.

இந்நிலையில் பொலிஸா ரைக் கண்டவுடன் வீதியில் நின்ற குழுவினர் தப் பிச் செல்ல முற்பட்ட 15

### யாழில் அதிகரிக்கும் டெங்கு

## அனுமதியற்ற நடைபாதைக் கடைகளை உடன் அகற்றுமாறு ஆளுநர் பணிப்பு



(யாழ்ப்பாணம்)

வடக்கு மாகாணத்தில் யாழ்ப்பாணம் மாவட்டத்தி லேயே அதிகளவான டெங்கு நோயாளர்கள் பதிவாகியுள்ள தால் டெங்கு நுளம்பு பரவு வதைத் தடுப்பதற்கு தேவை யான நடவடிக்கைகளை உடன் எடுக்குமாறு வடக்கு மாகாண ஆளுநர் பி.எஸ்.எம்.சார்ள்ஸ், துறைசார் அதிகாரிகளுக்கு பணிப்புரை விடுத்துள்ளார்.

டெங்கு நுளம்பு அதி கம் பரவும் இடங்கள் 15

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நடுவு நிலை தவறாது நன்னெறி காக்கும் உங்கள் நாளிதழ்

# கிளி., முல்லை., மன்னார் மாவட்டங்களில்
# என்றுமில்லாத வெள்ளப் பேரனர்த்தம்

- குளங்கள் வான் பாய்கின்றன
- வீதிகள், வீடுகள் வெள்ளத்தில்
- இடைத்தங்கல் முகாம்களில் மக்கள்





**கடந்த சில நாட்களாக வட மாகாணத்தில் பெய்துவரும் மழை காரணமாக பெருவெள்ள அனர்த்தம் ஏற்பட்டுள்ளது.**

**வட மாகாணத்தில் குறிப்பாக கிளிநொச்சி, முல்லைத்தீவு, மன்னார் ஆகிய மாவட்டங்கள் வெள்ள அனர்த்தத்தால் பாதிப்படைந்துள்ளன.**

## கிளிநொச்சி மாவட்டத்தில்...



கிளிநொச்சி மாவட்டத்தில் தொடர்ந்து பெய்துவரும் அடைமழை காரணமாக இதுவரை 1,299 குடும்பங்களைச் சேர்ந்த 4,096 பேர் பாதிக்கப்பட்டுள்ளதாக கிளிநொச்சி மாவட்ட அரசாங்க அதிபர் ரூபவதி கேதீஸ்வரன் தெரிவித்துள்ளார்.

வீடுகளுக்குள் வெள்ளம் புகுந்த நிலையில் மக்கள் 3 இடைத்தங்கல் முகாம்களில் தங்கவைக்கப்பட்டுள்ளனர் எனவும், கரைச்சி - கண்டாவளைப் பகுதிகளிலேயே பாதிப்புக்கள் அதிகமாக உள்ளதாகவும் அவர் தெரிவித்தார்.

அந்த வகையில், மாயவனூர், மலயாளபுரம், செல்வாநகர், இரத்தினபுரம், ஜெயந்திநர், ஆனந்தபுரம், மருதநகர், மாவடியம்மன், ஆனைவிழுந்தான், ஸ்கந்தபுரம், கனகாம்பிகைக்குளம், சிவநகர், உருத்திரபுரம் கிழக்கு ஆகிய பகுதிகளில் 347 குடும்பத்தைச் சேர்ந்த 1,135 பேர் பாதிக்கப்பட்டுள்ளனர்.

அத்துடன் கனகபுரம், பெரியகுளம், பிரமந்தனாறு, தர்மபுரம் கிழக்கு, தர்மபுரம், புன்னைநீராவி, குமாரபுரம், ஊரியான், உமையாள்புரம், பரந்தன், கண்டாவளை, முரசுமோட்டை, புளியம்பொக்கணை ஆகிய பகுதியில் 952 குடும்பங்களைச் சேர்ந்த 2,961 பேரும் பாதிக்கப்பட்டுள்ளனர் என அவர் மேலும் தெரிவித்தார்.

## முல்லைத்தீவு மாவட்டத்தில்...



முல்லைத்தீவு மாவட்டத்தில் தொடர்ச்சியாகப் பெய்து வருகின்ற கனமழை காரணமாக முல்லைத்தீவு மாவட்டத்தில் உள்ள அனைத்துக் குளங்களும் முற்று முழுதாக நிறைந்து வான் பாய்கின்ற நிலைமையில் பல்வேறு பகுதிகள் வெள்ளத்தால் கடுமையாக பாதிக்கப்பட்டுள்ளது.

நேற்று மதியம் திடீரென ஏற்பட்ட வெள்ளம் காரணமாக ஒட்டுசுட்டான் பிரதேசத்தின் புளியங்குளம், பண்டாரவன்னி உள்ளிட்ட கிராம மக்களின் வீடுகள் வெள்ளத்தில் மூழ்கியுள்ளன. இதனால் பலர் வெள்ளத்தில் சிக்கியுள்ளனர். இவர்களை ஒட்டுசுட்டான் பிரதேச செயலக அதிகாரிகள், கிராம அலுவலர்கள், கிராம மட்ட அமைப்புக்களின் பிரதிநிதிகள் கிராம இளைஞர்கள் இராணுவத்தினர் இணைந்து மீட்டு பாதுகாப்பான இடங்களில் தங்கவைக்கப்பட்டுள்ளனர்.

இதேபோன்று குளங்களுக்கான நீர் வரத்து மிக வேகமாகக் காணப்படுகின்ற நிலைமையில் பல்வேறு குளங்கள் உடைப்பெடுக்கும் அபாயத்தையும் எதிர்கொண்டுள்ளதோடு வான் பாய்கின்ற வெள்ளம் மக்கள் குடியிருப்புகளுக்குள் செல்வதற்கான வாய்ப்புகள் உள்ளமையினால் மக்கள் மிக அவதானமாக செயல்படுமாறு முல்லைத்தீவு மாவட்ட அனர்த்த முகாமைத்துவ பிரிவு தெரிவித்துள்ளது.



இதேவேளை நேற்று மாலை 4 மணி வரையான தகவல் அடிப்படையில் முல்லைத்தீவு மாவட்டத்தில் மாந்தை கிழக்கு பிரதேச செயலாளர் பிரிவில் அம்பாள்புரம், கரும்புள்ளியான், ஒட்டறுத்தகுளம், நட்டாங்கண்டல், பாண்டியன்குளம், செல்வபுரம், பாலிநகர், சிராட்டிகுளம், சிவபுரம், மூன்றுமுறிப்பு, பூவரசங்குளம், விநாயகபுரம் ஆகிய கிராம அலுவலர் பிரிவுகளில் உள்ள 283 குடும்பங்களை சேர்ந்த 942 பேர் பாதிக்கப்பட்டுள்ளனர்.

இதேபோன்று ஒட்டுசுட்டான் பிரதேச செயலாளர் பிரிவில் மாங்குளம், பனிக்கன்குளம், பண்டாரவன்னி, இந்துபுரம், தட்டையர்மலை, புளியங்குளம், தச்சடம்பன், கூழாமுறிப்பு, கனகரத்தினபுரம், காதலியார்சமனங்குளம், தண்டுவான், ஒட்டுசுட்டான் ஆகிய கிராம அலுவலர் பிரிவுகளில் 166 குடும்பங்களை சேர்ந்த 556 பேர் பாதிக்கப்பட்டுள்ளனர்.

கரைதுறைப்பற்று பிரதேச செயலாளர் பிரிவுக்கு உட்பட்ட கள்ளப்பாடு, சிலாவத்தை, செல்வபுரம், வற்றாப்பளை, தண்ணிமுறிப்பு, முள்ளியவளை தெற்கு, கள்ளப்பாடு வடக்கு, கள்ளப்பாடு தெற்கு ஆகிய கிராம அலுவலர் பிரிவுகளில் 44 குடும்பங்களைச் சேர்ந்த 136 பேர் பாதிக்கப்பட்டுள்ளனர்.

துணுக்காய் பிரதேச செயலாளர் பிரிவில் அணிஞ்சியன்குளம், உயிலங்குளம், தென்னியங்குளம், கோட்டைகட்டியகுளம், ஆலங்குளம், தேராங்கண்டல், கல்விளான், மல்லாவி, யோகபுரம் கிழக்கு, புகழேந்திநகர், பாரதிநகர், யோகபுரம் மேற்கு ஆகிய கிராம அலுவலர் பிரிவுகளில் 104 குடும்பங்களைச் சேர்ந்த 323 பேர் பாதிக்கப்பட்டுள்ளனர்.

இதேபோன்று புதுக்குடியிருப்பு பிரதேச செயலாளர் பிரிவில் புதுக்குடியிருப்பு மேற்கு, தேவிபுரம், மாணிக்கபுரம், உடையார்கட்டு வடக்கு, உடையார்கட்டு தெற்கு மற்றும் வள்ளிபுனம் ஆகிய கிராம அலுவலர் பிரிவுகளில் 283 குடும்பங்களைச் சேர்ந்த 730 பேர் பாதிக்கப்பட்டுள்ளனர்.


அந்த வகையில் மொத்தமாக முல்லைத்தீவு மாவட்டத்தில் 880 குடும்பங்களைச் சேர்ந்த 2,687 பேர் பாதிக்கப்பட்டுள்ளதாக அனர்த்த முகாமைத்துவ பிரிவின் தகவலில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதேவேளை பாதுகாப்பான இடங்களில் தங்க வைக்கப்பட்டுள்ள மக்களுக்கு பிரதேச செயலாளர் உதவி பிரதேச செயலாளர் பிரதேச செயலக அனர்த்த முகாமைத்துவ பிரிவு ஊழியர்கள் கிராம அலுவலர்கள், கிராம மட்ட அமைப்புக்களின் பிரதிநிதிகள் உள்ளிட்டவர்கள் மக்களுக்கான சமைத்த உணவு மற்றும் அத்தியாவசிய தேவைகளை ஏற்பாடு செய்து வழங்கி வருகின்றனர்.

## மன்னார் மாவட்டத்தில்...



மன்னார் மாவட்டத்தில் தொடர்ச்சியாக நிலவும் சீரற்ற காலநிலை காரணமாக மாந்தை மேற்கு பிரதேச செயலாளர் பிரிவுக்குட்பட்ட தேவன்பிட்டி, பாலியாறு கிராமங்களில் 131 குடும்பங்களை சேர்ந்த 438 நபர்கள் இடம்பெயர்ந்து தற்காலிக இடைத்தங்கல் முகாம்களில் தங்கவைக்கப்பட்டுள்ளனர்.



மன்னார் - யாழ்ப்பாணம் வீதியில் (ஏ-32) காணப்படுகின்ற பாலியாறு பெருக்கெடுத்ததன் காரணமாக தேவன்பிட்டி கிராமத்துக்குள் நீர் உட்புகுந்துள்ளது.

இதன் காரணமாக இடம்பெயர வேண்டிய நிலை ஏற்பட்டுள்ளதால் அப்பகுதி மக்கள் இடைத்தங்கல் முகாம்களில் தங்க வைக்கப்பட்டுள்ளனர்.

இவர்களுக்கான உணவினை மாந்தை மேற்கு பிரதேச செயலகம் மற்றும் மாவட்ட அனர்த்த முகாமைத்துவ பிரிவினர் வழங்கி வருகின்றனர்.



அத்துடன் பாலியாறு, பறங்கியாறு நீர் மட்டம் அதிகரிக்கும் சந்தர்ப்பங்களில் மன்னார் - யாழ்ப்பாணம் (ஏ-32) பிரதான வீதி வெள்ளத்தில் மூழ்கும் வாய்ப்பு காணப்படுகிறது. இதனால் அவ்வீதியூடாக பயணிக்கும் மக்கள் மிகவும் அவதானத்துடன் செயற்படுமாறு கேட்டுக்கொள்ளப்பட்டுள்ளது.

மேலும், மன்னார் மாவட்டத்தில் தொடர்ச்சியாக மழை பெய்து வருகின்றமையினால் மாவட்டத்தில் பெரும்பாலான தாழ் நிலப் பிரதேசங்கள் வெள்ள அனர்த்தத்துக்கு உள்ளாவதற்கான வாய்ப்பு ஏற்பட்டுள்ளதாக மன்னார் மாவட்ட அனர்த்த முகாமைத்துவ பிரிவின் மாவட்ட உதவிப்பணிப்பாளர் கே. திலீபன் தெரிவித்துள்ளார். (ரு-7)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அடுத்த ஆண்டில் தேர்தல் கட்டாயம்

## நீதி அமைச்சர் அறிவிப்பு

(கொழும்பு)

**அடுத்த ஆண்டில் ஜனாதிபதித் தேர்தல் கட்டாயம் நடத்தப்படும் என நீதியமைச்சர் விஜயதாஸ ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.**



கண்டியில் நேற்று முன்தினம் இடம்பெற்ற செய்தியாளர் சந்திப்பில் கலந்துகொண்டு அவர் இந்த விடயத்தை குறிப்பிட்டுள்ளார்.

அரசியலமைப்பின்படி, கட்டாயம் ஜனாதிபதித் தேர்தல் நடத்தப்பட வேண்டும். அதற்கான நடவடிக்கைகள் தற்போது முன்னெடுக்கப்பட்டு வருகின்றன.

எனினும், பொதுத்தேர்தல் தொடர்பில், இதுவரை எவ்வித கலந்துரையாடல்களையும் மேற்கொள்ளவில்லை எனத் தெரிவித்தார்.

மேலும் சமாதானம் மற்றும் நல்லிணக்கத்தை நிலைநாட்ட நீதியமைச்சினால் விசேட வேலைத்திட்டம் ஒன்று ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

சகல கிராம உத்தியோகத்தர் பிரிவுகளையும் உள்ளடக்கும் வகையில் குறித்த வேலைத்திட்டம் முன்னெடுக்கப்படுவதாக அவர் குறிப்பிட்டார்.

இதற்கமைய, சகல கிராம உத்தியோகத்தர் பிரிவுகளிலும் நல்லிணக்க அலுவலகங்களை நிறுவி, கிராமங்களின் பாதுகாப்பு, அபிவிருத்தி மற்றும் நல்லிணக்கத்தை ஏற்படுத்த எதிர்பார்ப்பதாக நீதியமைச்சர் விஜயதாஸ ராஜபக்ஷ தெரிவித்தார். (நி-5)

# அரச வைத்தியசாலைகளில் குவியும் நோயாளிகள்

(கொழும்பு)

கடுமையான பொருளாதார நெருக்கடி மற்றும் மருந்துகளின் விலை அதிகரிப்புக் காரணமாக அரச வைத்தியசாலைகளுக்கு வரும் நோயாளர்களின் எண்ணிக்கை நாளுக்கு நாள் அதிகரித்து வருவதாக அரச வைத்திய அதிகாரிகள் சங்கம் தெரிவித்துள்ளது.

பொருளாதார நெருக்கடி தீவிரமடைந்துள்ளமையே இந்த நிலைமைக்கான காரணம் என அரச வைத்திய அதிகாரிகள் சங்கத்தின் ஊடகப்பேச்சாளர் வைத்தியர் சமில் விஜேசிங்க தெரிவித்துள்ளார்.

பொருளாதார நெருக்கடி தீவிரமடைவதற்கு முனனர், இலங்கையில் 50 வீதமான நோயாளிகள் பொது வைத்தியசாலைகளின் வெளிநோயாளர் பிரிவுக்கும் மேலும் 50 வீதமானவர்கள் தனியார் வைத்தியசாலைகள் மற்றும் தனியார் மருத்துவ நிலையங்களுக்குச் சென்றனர்.

இருப்பினும் தற்போது மருந்துகளின் விலை அதிகரிப்பு காரணமாக அரச வைத்தியசாலைகளுக்கு வரும் நோயாளர்களின் எண்ணிக்கை நாளுக்கு நாள் அதிகரித்துள்ளது.

மேலும் சில நோயாளிகள் மேம்பட்ட சிகிச்சை முறைகளை நாடுவதும் வைத்திய பரிந்துரைகள் இன்றி சட்டவிரோதமாக மருந்துகளை உட்கொள்வதும் அவதானிக்கப்பட்டுள்ளது.

எனவே நோயாளிகளுக்கு அத்தியாவசியமான மற்றும் அடிக்கடி பயன்படுத்தப்படும் மருந்துகளின் பட்டியலை உடனடியாக தயாரித்து அவற்றின் விலையை கட்டுப்படுத்த வேண்டும் எனவும் வைத்தியர் தெரிவித்துள்ளார். (நி-5)

# சீன ஆய்வுக் கப்பலை அனுமதிக்க வேண்டாம்

## இந்தியா கோரிக்கை

(டில்லி)

இலங்கை கடற்பிராந்தியத்தில் ஆய்வுகளை மேற்கொள்ள வரும் சீனக் கப்பலுக்கு அனுமதி வழங்க வேண்டாம் என இந்தியா இலங்கையிடம் கோரிக்கை விடுத்துள்ளது.

சீன ஆய்வுக் கப்பலான Xiang Yand Hong 3 கப்பல் எதிர்வரும் ஜனவரி மாதம் 5 ஆம் திகதி முதல் மே மாதம் இறுதி வரை தென்னிந்தியக் கடற்பரப்பில் ஆய்வு நடவடிக்கைகளை முன்னெடுக்க எதிர்பார்த்துள்ளது.

இலங்கை மற்றும் மாலைதீவுகளின் கடற்பரப்புகளும் அதில் அடங்குகின்றன. (நி-5)

# தேர்தல் பிரசாரம் ஜனவரியில் ஆரம்பம்

## உயர்மட்ட தகவல்கள் தெரிவிப்பு

(கொழும்பு)

எதிர்வரும் ஜனாதிபதித் தேர்தலை இலக்காகக் கொண்டு ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவின் தேர்தல் பிரசாரம் ஜனவரி மாதத்தின் இரண்டாம் வாரத்தில் ஆரம்பிக்கப்படவுள்ளதாக அரசாங்கத்தின் உயர்மட்ட தகவல் வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

ஜனாதிபதியின் சிரேஷ்ட ஆலோசகர் சாகல ரத்நாயக்க தேர்தல் பிரசார முகாமையாளராக நியமிக்கப்படவுள்ளார்.

இதேவேளை, எதிர்வரும் ஜூலை மற்றும் செப்டெம்பர் மாதங்களுக்கு இடையில் ஜனாதிபதித் தேர்தல் நடைபெற வாய்ப்பு உள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவைத் தவிர சஜித் பிரேமதாஸ, அநுர திஸாநாயக்க, தம்மிக்க பெரேரா, ஜானக ரத்நாயக்க மற்றும் திலித் ஜயவீர ஆகியோர் ஜனாதிபதித் தேர்தலில் போட்டியிடவுள்ளதாக இதுவரையில் தகவல் வெளியாகியுள்ளமை குறிப்பிடத்தக்கது. (நி-5)

## புலம்பெயர் தமிழர்களுக்காக திறக்கப்பட்டுள்ள

# இலங்கை அரசின் கதவுகள்

## அமைச்சர் அலிசப்ரி அழைப்பு

(கொழும்பு)

புலம்பெயர் தமிழ் அமைப்புக்களுக்கு அரசாங்கத்துடன் இணைந்து பயணிப்பதற்கான கதவுகள் திறக்கப்பட்டுள்ளன. அதற்கான கலந்துரையாடல்களுக்கு நாம் என்றும் தயாராகவே உள்ளோம் என வெளிவிவகார அமைச்சர் அலிசப்ரி தெரிவித்துள்ளார்.

மேலும் எம்முடன் இணைந்து செயற்பட புலம்பெயர் தமிழ் அமைப்புக்களுக்கு விருப்பமில்லை என்றால் அவர்கள் தாராளமாக வடக்கு, கிழக்கு மக்களின் வாழ்வாதார மேம்பாடுகளுக்கு உதவிகளை கணிசமாகச் செய்ய முடியும் எனவும் அவர் தெரிவித்தார்.

ஊடகம் ஒன்றுக்கு கருத்துத் தெரிவிக்கும் போதே அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டுள்ளார்.

தற்போது இலங்கையின் உள்நாட்டில் வாழ்கின்ற அனைத்து சமூகங்களும் ஐக்கிய இலங்கைக்குள் இனப்பிரச்சினை உள்ளிட்ட அனைத்து விடயங்களுக்கும் தீர்வினை எட்டுவதற்கு இணக்கம் வெளியிட்டுள்ளார்கள். அதற்காக அவர்கள் கடந்த தேர்தல்களில் ஆணையும் வழங்கியுள்ளார்கள்.

அவ்வாறான நிலையில், தனிநாட்டுக் கோரிக்கை அல்லது தாயக தேசக் கோரிக்கையானது வெறுமனே ஒரு சில தமிழ் புலம்பெயர் அமைப்புகளின் தேவைகளுக்காக காலத்தினைக் கடத்தும் செயற்பாடாகவே அமையவுள்ளது.

தற்போதைய அரசாங்கத்தினைப் பொறுத்தவரையில், தமிழ் மக்கள் தமது அபிலாஷைகளை பூர்த்தி செய்து கொள்வதற்கு சமஷ்டி அடிப்படையிலான கோரிக்கையை முன்வைக்கின்றார்கள். அதிகாரப்பகிர்வினைக் கோருகின்றார்கள் என்பதை புரிந்து கொண்டுள்ளது.

எனினும், நடைமுறைச் சாத்தியமான வகையிலான கோரிக்கைகள் பற்றியே சிந்தித்து கலந்துரையாட வேண்டியுள்ளது. அந்த வகையில் ஐக்கிய இலங்கைக்குள் அதிகாரங்களை பகிர்ந்துகொள்வதை நோக்கிய செயற்பாடுகளுக்கு அரசாங்கம் தயாராகவே உள்ளது.

அதுமட்டுமன்றி, தேசிய நல்லிணக்கச் செயற்பாடுகளுக்கான அலுவலகம், இழப்பீட்டுப் பணியகம், உண்மை மற்றும் நல்லிணக்க ஆணைக்குழு உள்ளிட்ட காத்திரமான செயற்பாடுகள் முன்னெடுக்கப்படுகின்றன.

பொருளாதார நெருக்கடிகளிலிருந்து மீண்டெழும் அதே நேரம் அதற்கு சமாந்தரமாக இனங்களுக்கு இடையில் நிரந்தரமான நல்லிணக்கத்தை ஏற்படுத்தும் முயற்சிகளும் முன்னெடுக்கப்படுகின்றன.



ஆகவே, புலம்பெயர் தேசங்களில் உள்ள சில தமிழ் அமைப்புக்கள் உள்நாட்டு யதார்த்த நிலைமைகளை புரிந்து கொள்ளாது அவர்கள் சார்ந்த பாராளுமன்ற உறுப்பினர்களையும் தவறாக வழிநடத்துவது பொருத்தமற்ற அணுகுமுறையாகும்.

இதனால், வடக்கு, கிழக்கில் உள்ள மக்கள் எந்தவிதமான நன்மைகளையும் அடையப்போவதில்லை. மாறாக, புலம்பெயர் தேச தமிழ் அமைப்புக்கள் மட்டுமே தமது நலன்களை அடைவார்கள்.

மேலும் அரசாங்கமும் போரால் பாதிக்கப்பட்ட மக்களின் வாழ்வாதார மேம்பாட்டுக்காக இதுகால வரையிலும் பல்வேறு நடவடிக்கைகளை முன்னெடுத்துள்ளது. 2024 ஆம் ஆண்டுக்கான வரவு, செலவுத் திட்டத்தில் அதற்கான விசேட அறிவிப்புக்கள் காணப்படுகின்றமை சான்றாக உள்ளது என அவர் குறிப்பிட்டார். (நி-5)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




# தேசிய மாகாணப் போட்டிகளில் சாதனை படைத்த வீரர்கள் கௌரவிப்பு





முல்லைத்தீவு மாவட்டம் சார்பாக பங்குகொண்டு தேசிய மாகாண மட்டத்திலான போட்டிகளில் சாதனைகள் புரிந்த புதுக்குடியிருப்பு பிரதேச செயலர் பிரிவின் வீரர்களுக்கான, அவர்களை பயிற்று வித்த பயிற்றுநருக்கான கௌரவம் அளிக்கும் நிகழ்வுகள் மிகவும் சிறப்புற நடைபெற்றன.

முல்லைத்தீவு புதுக்குடியிருப்பு பிரதேச செயலகத்திலுள்ள மாநாட்டு மண்டபத்தில் புதுக்குடியிருப்பு பிரதேச செயலாளர் தலைமையில் கௌரவிப்பு நிகழ்வானது நேற்று முன்தினம் இடம்பெற்றுள்ளது. (நி-5-299-350)

# திசோன்-நியூற்றன் அபாரபந்துவீச்சு; சம்பியனானது யாழ்.மத்திய கல்லூரி அணி

அகில இலங்கை பாடசாலைகளுக்கு இடையிலான துடுப்பாட்டப் போட்டியில் கொழும்பு அசோகா கல்லூரியை வீழ்த்தி சம்பியனானது யாழ்ப்பாணம் மத்திய கல்லூரி அணி.




இலங்கைப் பாடசாலைகளுக்கான டிவிசன் 11- டீ பிரிவில் கொழும்பு அசோகா கல்லூரிக்கும் யாழ்ப்பாணம் மத்திய கல்லூரிக்குமிடையில் அண்மையில் இறுதியாட்டம் நடைபெற்றது.

நாணயச் சுழற்சியில் வெற்றி பெற்ற கொழும்பு அசோகா கல்லூரி முதலில் துடுப்பெடுத்தாடத் தீர்மானித்தது.

ஆரம்பம் முதல் பந்துவீச்சில் அதிரடி காட்டிய யாழ். மத்திய கல்லூரி அணியின் பந்துவீச்சாளர்களின் வேகத்தில் 34.1 ஓவர்களில் 95 ஓட்டங்களுக்கு சகல விக்கெட்டுகளையும் இழந்தது கொழும்பு அசோகா கல்லூரி அணி.

பந்து வீச்சில் திசோன் 10 ஓவர்கள் வீசி 30 ஓட்டங்களை விட்டுக் கொடுத்து 5 விக்கெட்டுக்களையும் நியூற்றன் 7 ஓவர்கள் பந்து வீசி 21 ஓட்டங்களுக்கு விக்கெட்டுக்களையும் சாய்த்தனர்.

பதிலுக்கு 96 என்ற இலகு வெற்றி இலக்கை நோக்கி துடுப்பெடுத்தாடிய யாழ். மத்திய கல்லூரி அணி வெறும் 6.5 ஓவர்களில் 3 இலக்குகளை இழந்து 55 ஓட்டங்களைப் பெற்ற வேளை மழை குறுக்கிட்டதனால் போட்டி நிறுத்தப்பட்டு இரு அணிகளுக்கும் சம்பியன் பட்டம் வழங்கப்பட்டது. (க)

# மும்பை அணியின் தலைவராக ஹர்திக் பாண்டியா



மும்பை அணியின் தலைவராக செயற் பட்டு வந்த ரோகித் சர்மாவிற்கு பதிலாக ஹர்திக் பாண்டியா அணியின் புதியதலைவராக நியமிக்கப்பட்டுள்ளார்.

இந்த நிலையில், முன்னாள் அணித் தலைவர் ரோகித் சர்மாவுக்கு மும்பை இந்தியன்ஸ் சார்பில் நன்றி தெரிவித்து அறிக்கை வெளியிட்டுள்ளது.

அணியின் எதிர்காலத்தை கட்டமைக்கும் நோக்கில் இந்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக மும்பை இந்தியன்ஸ் அணி அறிவித்துள்ளது.

சச்சின் டெண்டுல்கர் முதல் ஹர்பஜன் சிங், ரிக்கி பொண்டிங் முதல் ரோகித் சர்மா வரை அனைவரும் அணிக்கு வெற்றியை தேடிக் கொடுத்துள்ளனர் என்றும் தெரிவித்துள்ளது. இந்நிலையில் இந்த குறிக்கோளுக்கு ஏற்ப 2024 ஐ.பி.எல் தொடரில் மும்பை இந்தியன்ஸ் அணியின் தலைவர் பொறுப்பை ஹர்திக் பாண்ட்யா ஏற்க உள்ளதாகவும் அறிவித்துள்ளது. (நி-5)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# காரைநகர் மாணிக்கவாசகர் மடாலய அருளாட்சியும் ஞானச்சுடர் நிலையம் விருதும், ஈழத்துச் சிதம்பரம் அடியார்கள் அரவணைப்பும் 2023 ஆம் ஆண்டு 97 ஆவது மடாலய அன்னதானத் திருப்பணியும் அறச்செழிப்பும்

**வந்து இமையோர்கள் வணங்கி ஏத்த**
**மாக் கருணைக் கடல் ஆய், அடியார்**
**பந்தனை விண்டு அற நல்கும், எங்கள்**
**பரமன், பெருந்துறை ஆதி, அந்நாள்**
**உந்தி திரைக் கடலைக் கடந்த, அன்று**
**ஓங்கு மதில் இலங்கை அதனில்,**
**பந்து அணைமேல் விரலாட்கு அருளும்**
**பரிசு அறிவார் எம்பிரான் ஆவாரே...**

***திருவாசகம்-***

தேவர்கள் வந்து வணங்கி, வழிபட்டுத் துதிக்க அவர்கட்குப் பேரருள் புரிந்த கடல் போன்றவன். **அன்பர்களின் பாசக் கட்டு நீங்கும் படி** அருளுகின்ற எங்கள் மேலானவன் திருப்பெருந்துறை முதல்வன்.

அக் காலத்தில் அலை வீசுகின்ற கடலைத் தாண்டிச் சென்று இலங்கையில் மண் டோதரிக்கு அருள் புரியும் தன்மையை அறிய வல்லார் எமது தலைவராவர். **கருணையே வடிவாய் எங்கும் நிறைந்துள்ள கண்ணுதற் கடவுளான ஈழத்துச் சிதம்பரம் தில்லைக் கூத்தனை மெய்யன்புடன் போற்றி வழிபட்டால் முத்தி நிச்சயம் "ஓம் நமசிவாய."**

**திடம் பெற்ற ஞானிகள் சேர்க்கையினால்,**
**பசி தீர்க்கையினால்**
**உடம்புற்ற உண்மை உறுகையினால்,**
**உபதேசிக்கையில்**
**இடம்பெற்ற மங்கை பங்காளர் அடியார்**
**இருக்கையினால்**
**மடம் பெற்ற பேறு திருக்கோயிலுக்கில்லை**
**வையகத்தே**

என்னும் மார்த்தாண்ட மகோதயப் பாடலை நோக்குவது நன்று

***-ஞானசம்பந்தம்.***

மகாதேவன் ஆலயங்களை மடாலயங்களே வழிபடச் செய்வன. வழிபடும் வழிமுறைகளை உணர்த்துவோர்களும் உறையும் பெருமையன; **உண்டி கொடுத்தும் உயிர்கொடுத்தும் உணர்வு கொடுத்தும் உய்யும் வழிகொடுத்தும், உள்ளொளி கொடுத்தும் உலவாதபேரின்பம் கொடுத்தும் வருவன; இதனை மாணிக்கவாசகர் "பால் நினைந்து ஊட்டும்" எனும் 544 திரு வாசகத்தில்**

**" ஊனினை உருக்கி உள்ளொளி பெருக்கி**
**உலப்பிலா ஆனந்தமாய"**

அம் மகாதேவனுடைய அடியார்களையுடையன; இராப்பகலற்ற எல்லையில் சிவஞானந்தம் எய்தும் திருவருள் விலாசமே நிரம்பப் பெற்றன; அதனால் **மடாலயங்கள்** எல்லாம் மகாதேவாலயங்களிலும் **மாண்புடையவை. ஓம் நமசிவாய..**

இது மாண்புடைமையை, 28.10.12 அன்று ஸ்ரீலஸ்ரீ.ஆறுமுகநாவலர் குருபூஜை தினத்தில், நாவலர் என்னும் விருது வழுங்கிய திருவாவடுத்துறை ஆதினம் "சீர்வளர் சிவப்பிரகாச சுவாமிகள்", ஈழத்துச் சிதம்பரம் மாணிக்கவாசகர் மடாலயத்திற்கு அன்ன தானப் பணியைப் பாராட்டி **"ஞானச்சுடர் நிலையம்"** எனும் சிறப்பு விருதினையும் **"பொற்கிழி"** வழுங்கி கௌரவித்தது.

நாவலர் குருபூஜை அன்று ஆதினத்தில் பல புலவர்கள்,ஓதுவார்கள் முன்னிலையில் விருது கௌரவத்தை ஏற்ற மாணிக்கவாசகர் மடாலய பாதுகாவலரை "நாவலர்" அவர்களைப் பற்றி பேசுமாறு பணித்தார்கள். மடாலய காப்பாளர் அன்று அங்கு பூர்த்தி செய்ததும் மாணிக்கவாசகர் ஆசியும் தில்லைக் "கூத்தனது" திருவருளே ஆகும்.

:ஓம் நமசிவாய"

அநாதியாகவே ஆணவ மல பந்தத்தால் அறிவு முடங்கிக் கட்டுண்டு கிடக்கும் உயிரினத்தைக் கட்டு நீங்கி பிறவிப் பெருங்கடலின் கரை ஏற்றுவதே பெருமானது பேரருள் உள்ளம்.

இது சிவப்பணியில் மடாலயம் கடந்த வருடம் மாதா,மாதம் மாணிக்கவாசகர் நட்சத்திரமாகிய "மகம்" அன்று திருவாசக முற்றோதல் ஓதி வருவதுடன், **அடையாக்கவாத அன்னதானப் பணியும்** சிறப்புடன் செய்வது எல்லாம் **கூத்துப் பெருமான்** திருவருள் ஓம் நமசிவாய.

**தில்லைத் திருமுறைகள், திருவாசகம்**
**எல்லையிலா அன்பால் ஓதினால்**
**பிறவித் தளையகற்றும்.**

**கல்வியின் பயன் சிவஞானத் தெளிவு பெறல்**
**செல்வத்தின் பயன் சிவாலயத்திருப்**
**பணிகளில் ஈடுபடல்**
**வாழ்வின் பயன் தான் பெற்ற இறை**
**அனுபவத்தை**
**இவ் வையகத்தோர் யாவரும் பெறுமாறு**
**செய்தல்.**

***திருமந்திரம்-1025-3 வது வரி***

"திக்கண ணாகித்திகையெட்டும் கண்டவன்"

**இந்தப் பரந்த உலகில் நாம் செய்யும் ஒவ்வொரு செயலையும் இறைவுர் கவனித்து வருகிறார் என்பதை நினைவில் கொள்ள வேண்டும்.** என்கிறார் திருமூலநாயனார். எல்லோரும் கடவுளை தேடிச் செல்கின்றார்கள் கடவுள் தமிழ் வேதப் பாடல்களைப் பாடிய அடியார் பெரு மக்களைத் தேடி வந்தார்.

இதனை மாணிக்கவாசகர் திருப்பள்ளி எழுச்சி திருவாசகத்தேன் (375)

**"பந்து அணை விரலியும் நீயும் நின் அடியார்**
**பழங்குடில் தொறும் எழுந்தருளிய பரனே"**

பந்தை ஏந்திய விரல்களையுடைய உமையம் மையும் நீயும் நின் அடியார் **பழைய சிறிய வீடுதோறும்** எழுந்தருளின மேன்மை மிக்கவனே! ஓம் நமசிவாய.

திருமுறைகளைப் பதிகங்களை நாளும் ஓதி உய்வு பெற வேண்டுவது ஒவ்வொருவரது கடமை யாகும். ஆலயங்களிலும், இல்லங்களிலும், உள்ள ங்களிலும் இவற்றை ஒலிக்குமாறு செய்வது சிறந்த. ஓர் சிவப் பணியாகும்.

ஓம் நமசிவாய

"மண்ணில் நல்லவண்ணம் வாழலாம் வைகலும்.

எண்ணில் நல்லகதிக்கு யாதும் ஓர் குறைவில்லை. அன்பே சிவம்

**க.கு.க சிவபாலன்,**
**திரு.திண்ணபுரச்சிவ**
**ஈழத்துச் சிதம்பரம்,**
**மாணிக்கவாசகர் மடாலயம்**
**காப்பாளர்.**



# இராசிபலன்

**18.12.2023**
**மார்கழி 02, திங்கட்கிழமை**
**சஷ்டி முன்னிரவு 6.39 மணிவரை**
**அவிட்டம் காலை 6.31 மணிவரை**

**சதயம் பின்னிரவு 4.52 மணிவரை**
**சுபநேரம் 12.23-1.53 மணிவரை**
**இராகுகாலம் 7.53-9.23 மணிவரை**
**விநாயக சஷ்டி விரதம்**

**திருவெம்பாவை பூசை ஆரம்பம்**
**சந்திராஷ்டமம்-பூசம்.**

**வளவன்**




இயல்பான வாழ்க்கையில் இன்பங்கள் கூடும் நாள், வீட்டுத் தேவைகளைப் பூர்த்தி செய்து கொள்ளும் எண்ணம் உருவாகும், ஆற்றல் மிக்கவர்களின் ஒத்துழைப்பு கிடைக்கும்.




நேசித்த ஒருவருடன் யோசித்துப் பேசும் சூழ்நிலை ஏற்படலாம், உடல் நலன் பற்றிய கவலை உருவாகி மறையும்,வழிபாட்டால் இன்பம் காண வேண்டிய நாள்.




தொழிலில் எதிர்பார்த்த சலுகைகள் கிடைக்கும் வாய்ப்புண்டு, கொள்கைப் பிடிப்போடு செயற்படுவீர்கள், கோரிக்கைகள் நிறைவேற கோயிலுக்குச் செல்ல வேண்டிய நாள்.




பிரியமான சிலரின் சந்திப்பு இடம் பெறலாம், குடும்பத்தில் சுகங்களும் சந்தோசங்களும் அதிகரிக்கும், எதிர்கால நலன் கருதி எடுத்த முயற்சிகள் கைகூடும்.




அரைகுறையாக இருந்த பணிகளை மீதியும் தொடர்வீர்கள், சமுதாயத்தில் உயர்ந்த நிலைக்கு வரத் தோன்றும், வாய்ப்புக்கள் உங்களை நாடி வரலாம்.




மனதிற்கினிய சம்பவமொன்று இடம்பெறலாம், உறவினர்கள் வருகையால் உள்ளம் மகிழ்வீர்கள், எடுத்த காரியங்கள் எளிதில் கைகூடும்.




பொழுது போக்கு விடயங்களில் ஆர்வம் காட்டுவீர்கள், சுபகாரியப் பேச்சுக்களில் முன்னேற்றம் காணும் நாள், நண்பர்கள் வழியில் ஒத்துழைப்புக் கிடைக்கும்.




சான்றோர்களின் சந்திப்பால் சந்தோசமடைவீர்கள், மறக்க முடியாத சம்பவங்கள் இடம்பெறலாம், தெய்வீக சிந்தனை மேலோங்கும் நாள்.




விட்டுப்போன தொடர்புகள் மீண்டும் வந்து சேரலாம், தடைப்பட்ட காரியங்களில் முன்னேற்றம் காணும் நாள், பகை விலகி பாசம் கூடும் நாள்.




கொடுக்கல் வாங்கல்களை ஒழுங்கு செய்து கொள்ள முற்படுவீர்கள், இனத்தார் பகை மாற எடுத்த முயற்சிகள் கைகூடும், தொழிலை விரிவுபடுத்தும் எண்ணம் உருவாகும்.




நீண்ட நாளைய பிணக்குகளில் திசை திருப்பங்கள் ஏற்படலாம், வியாபார விரோதம் விலகும், செய்தொழில் மேன்மையுண்டு, காரிய அனுகூலமுண்டு.




மூத்த சகோதரர்கள் உங்களின் நலனில் அக்கறைகாட்டுவர், சுப விரயங்கள் கூடும் நாள், எடுத்த காரியங்களை நிறைவேற்ற அதிக பிரயாசை காட்ட வேண்டிய நாள்.

**சோம்பேறியாக வாழ்பவன் விரைவில் சோறின்றி நீரின்றி வறியவனாவான்.**

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# சீரற்ற காலநிலையால் உயிரிழக்கும் கால்நடைகள்



(யாழ்ப்பாணம்) நாட்டில் ஏற்பட்டுள்ள சீரற்ற காலநிலை காரணமாக கால் நடைகள் இறக்கும் நிலை ஏற்பட்டுள்ளது. அந்த வகையில் கண்டாவளை பிரதேச செயலாளர் பிரிவுக்கு உட்பட்ட சில பகுதிகளில் 5 ஆடுகளும் 136 கோழிகளும் இறந்துள்ளதாக இதுவரையில் தகவல் கிடைக்க பெற்றுள்ளதாக கால்நடை வைத்தியர் தெரிவித்துள்ளார்.

எனவே இது தொடர்பாக கால்நடை உரிமையாளர்கள் மிகுந்த கவனத்துடனும் அவதானத்துடன் செயற்பட வேண்டும்.

கடந்த காலங்களிலும் அதிக குளிருடன் கூடிய காலநிலை காரணமாக கால்நடைகளுக்கு பெரும் இழப்புக்கள் ஏற்பட்டமை குறிப்பிடத்தக்கது. (நி-5-316)



யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம் உருவாகுவதற்கு அடித்தளமான பரமேஸ்வராக் கல்லூரியின் நிறுவுநரும் சைவப் பெருவள்ளலாருமான சேர்.பொன். இராமநாதனின் 93 ஆவது குருபூசை நேற்று முன்தினம் சனிக்கிழமை இடம்பெற்றது. பல்கலைக்கழக வளாகத்தினுள் அமைந்துள்ள பரமேஸ்வரன் ஆலயத்தில் விசேட அபிஷேகம், பூஜையுடன் இந்நிகழ்வுகள் ஆரம்பமாகின.

அதன்போது, பல்கலைக்கழகத்தினுள் அமைந்துள்ள சேர்.பொன்.இராமநாதனின் உருவச் சிலைக்கும் சபா மண்டபத்தினுள் உள்ள உருவப் படத்துக்கும் மலர்மாலை அணிவித்து, வணக்கம் செலுத்தப்பட்டது. (படங்கள்:-சிவசாந்தன்)



**அநுராதபுரத்தில் அண்மையில் நடைபெற்ற தேசிய ரீதியிலான நடனப் போட்டிகளில் யா/ஏழாலை மகா வித்தியாலய மாணவர்களின் சங்ககால வாழ்வியல் நடனம் முதலாம் இடத்தையும் தப்பாட்டம் இரண்டாம் இடத்தையும் பெற்றுள்ளன.**



மார்கழி மாதப்பிறப்பினை முன்னிட்டு மார்கழிமாத திருப்பாவை ஆண்டாள் உற்சவம் நேற்று யாழ். மாவட்டத்தில் உள்ள அனைத்து விஷ்ணு ஆலயங்களிலும் சிறப்பான பூஜைகள் இடம்பெற்றன. (படங்கள்:-சிவசாந்தன்)


தென்னாடு

## தென்னாடு செந்தமிழ் ஆகம சிவமட சைவ மாணவர் சபை நடாத்தும்

## 'மார்கழிப் பெருவிழா - 2023'

திருமுறையே சைவநெறிக் கருவூலம் தென்தமிழின் தேன்பாகு ஆகும்
திருமுறையே கயிலையின் கண் சிவபெருமான் செவிமடுத்த செந்தமிழ் வேதம்
திருமுறையே நடராசன் கரம் வருந்த எழுதியருள் தெய்வ நூலாம்
திருமுறையே சொக்கேசன் மதிமலிவாய் மலர்ந்தருளும் சிறப்பிற்றாமால்

தென்னாடு செந்தமிழ் ஆகம சிவமட சைவ மாணவர் சபை நடாத்தும் மார்கழிப் பெருவிழா இம்முறை மார்கழித் திங்கள் 9 ஆம் நாள் (டிசெம்பர் 25) திங்கட்கிழமை, இலங்கை வேந்தன் கலைக் கல்லூரி மண்டபத்தில் (கல்லூரி வீதி, நீராவியடி, யாழ்ப்பாணம்) நடாத்த திருவருள் கூடியுள்ளது.

**மார்கழித் திங்கள் 9 ஆம் நாள் (டிசெம்பர் 25) திங்கட்கிழமை**

காலை 8 மணியளவில் யாழ்ப்பாணம் இந்து ஆரம்ப பாடசாலை மங்களநாதர் திருக்கோயில் வழிபாட்டுடனும் மற்றும் திருமுறை, நால்வர் பல்லக்கில் திருவீதியுலாவிற்கு எழுந்தருளலுடன் அரங்கங்கள் ஆரம்பமாகும்.

**காலை அரங்கம் - தில்லைக்கூத்தன் திருவம்பலம்**

(காலை 8.45 மணி தொடக்கம் 12.30 மணிவரை)

- 8.45 மணி - திருவிளக்கேற்றலும் அம்பலவாணர் அருள்வழிபாடும்
- 9.00 மணி - தொடக்க உரை - சிவத்திரு. **குணரத்தினம் பார்த்தீபன்** (முதல்வர்-தென்னாடு செந்தமிழ் ஆகம சிவமடம்)
- 9.10 மணி- அருளுரை-தவத்திரு.**வேலன் சுவாமிகள்** (முதல்வர்-சிவகுரு ஆதீனம்)
- 9.20 மணி- திருமுறை விண்ணப்பம்-சிவத்திரு.**பத்மநாதன் சிவமைந்தன்** குழுவினர்
- 9.45 மணி- தலைமை உரை -கலாநிதி **பொன்னுத்துரை சந்திரசேகரம்** (தலைவர் - சைவசித்தாந்தத் துறை, யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்)
- 10.00 மணி- வாழ்த்துரை - பேராசிரியர்.**சி.சிறிசற்குணராசா** (துணைவேந்தர்- யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்)
- 10.15 மணி- சிறப்புரை - தலைப்பு - **"பெரியபுராணம்"** வழங்குபவர் - சிவ.**பவானிஅ.தியாகராஜன் ஐயா** (அரன்பணி அறக்கட்டளை)
- 12.15 மணி-கௌரவிப்பு நிகழ்வு - கொடையாளர்களைச் சிறப்புச் செய்யும் நிகழ்வு

**அடியார் தமக்கு அமுது செய்விக்கும் நிகழ்வு - 12.30 முதல் 1.30 மணி வரை**

**மாலை அரங்கம் - சேக்கிழார் அரங்கம்**

**(1.30 மணி முதல் 4.30 மணிவரை)**

- 1.30 மணி -தலைமை உரை - சிவத்திரு **நல்லையா விஜயசுந்தரம்** (தலைமை ஆசிரியர் - வலம்புரிப் பத்திரிகை)
- 1.45 மணி - சிவதாண்டவம் (யா/குப்பிழான் விக்கினேஸ்வரா மகா வித்தியாலயம்)
- 2.00 மணி- சிறப்புரை - தலைப்பு - **"நானோ இதற்கு நாயகமே"** வழங்குபவர் - சிவத்திரு.**ச.விநாயகமூர்த்தி ஐயா** (ஓய்வுநிலை போதனா ஆசிரியர்)
- 3.00 மணி-பட்டிமண்டபம்-தலைப்பு-**'திருவாசகத்தில் கற்போர் மனதை ஈர்ப்பது, பக்திச்சுவையே!- இலக்கியச்சுவையே!'**
- 4.00 மணி- பரிசளிப்பு நிகழ்வு-திருவாசகக் கட்டுரைப்போட்டிக்கான பரிசில் வழங்கல்
- 4.20 மணி- நன்றியுரை - சிவத்திரு. **செந்தமிழாதன்** (பொதுச் செயலாளர் - சைவ மாணவர் சபை)

நிகழ்ச்சி முன்வைப்பு - சிவத்திரு. **செந்தமிழாதன்** மற்றும் சிவத்திரு. **பாலுசாமி சிவமாதவன்** (ஆசிரியர்கள் - தென்னாடு திங்கள் இதழ்)

**"மேன்மைகொள் சைவநீதி விளங்குக உலகமெலாம்"**
திருச்சிற்றம்பலம்

**தென்னாடு செந்தமிழ் ஆகம சிவமடம்,**
**கொக்குவில், யாழ்ப்பாணம். 021 222 9722 / 070 770 1111.**

விழா அனுசரணை-
LAND MAARK ENGINEERING (PVT) LTD
Ken Tower

(C-7927)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வற் என்ற போர்வையில் அதிகரிக்கும் பொருட்களின் விலை

## நுகர்வோர் அதிகார சபை எச்சரிக்கை

(கொழும்பு)

**வற் என்ற போர்வையில் பொருட்களின் விலையை நியாயமற்ற வகையில் உயர்த்தும் வர்த்தகர்களுக்கு எதிராக கடுமையான சட்ட நடவடிக்கை எடுக்கப்படுமென நுகர்வோர் விவகார அதிகார சபை எச்சரித்துள்ளது.**

வற் வரி விதிக்கப்பட்டுள்ளதாக தெரிவித்து சில வர்த்தகர்கள் பொருட்களின் விலையை அதிகரித்துள்ளதாக பாவனையாளர்கள் குற்றம் சுமத்துகின்றனர்.

ஜனவரி மாதம் முதலாம் திகதி முதல் வற் எனப்படும் பெறுமதி சேர் வரியை அதிகரிப்பதற்கு அரசாங்கம் தீர்மானித்துள்ளதுடன், அது தொடர்பான திருத்தச் சட்ட மூலம் அண்மையில் பாராளுமன்றத்தில் நிறைவேற்றப்பட்டது.

இதன்படி, ஏற்கனவே 15 சதவீத வற் வரி விதிப்புக்கு உட்படும் பொருட்களுக்கு மேலும் 3 சதவீதமும் முன்னதாக வரி விலக்கு அளிக்கப்பட்டிருந்த சில பொருட்களுக்கு புதிதாக 18 சதவீத வற் வரியும் விதிக்கப்படவுள்ளது.

இந்தநிலையில், குறித்த வரி அமுலாவதற்கு முன்னதாகவே நியாயமற்ற வகையில் பொருட்களின் விலையை அதிகரித்துள்ள வர்த்தகர்கள் தொடர்பில் முறைப்பாடுகள் சமர்ப்பிக்கப்பட்டுள்ளதாக நுகர்வோர் அதிகாரசபையின் சிரேஷ்ட அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

இது தொடர்பான முறைப்பாடுகளை அறிவிக்க 1977 என்ற துரித தொலைபேசி எண்ணைப் பயன்படுத்த முடியும் எனவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

இதேவேளை, பண்டிகை காலத்தை முன்னிட்டு, நுகர்வோர் விவகார அதிகார சபை நாடு முழுவதும் சோதனைகளை முன்னெடுத்துள்ளது.

எதிர்வரும் ஜனவரி மாதம் 15 ஆம் திகதி வரை இந்த சோதனை நடவடிக்கைகள் முன்னெடுக்கப்படவுள்ளதாக அந்த அதிகாரசபை குறிப்பிட்டுள்ளது. (நி-5)

# நீதிபதிகளுக்கு இடமாற்றங்கள்

(கொழும்பு)

வருடாந்த இடமாற்ற நடவடிக்கைகளின் அடிப்படையில் 54 நீதிபதிகளுக்கு பணியிட மாற்றம் வழங்கப்பட்டுள்ளதாக நீதிச்சேவை ஆணைக்குழு தெரிவித்துள்ளது.

இதனடிப்படையில், எதிர்வரும் ஆண்டு ஜனவரி முதலாம் திகதி முதல் அமுலுக்கு வரும் வகையில் நீதிபதிகள், மாவட்ட நீதிபதிகள், நீதிமன்ற நீதிவான்கள் 54 பேர் இடமாற்றம் செய்யப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

சில பிரதேசங்களின்தேவைகளின் அடிப்படையிலேயே இடமாற்றங்கள் வழங்கப்பட்டுள்ளதாக நீதிச்சேவை ஆணைக்குழு மேலும் தெரிவித்துள்ளது.

அந்தவகையில், கிளிநொச்சி உட்பட கடுவெல, பூகொட, மாரவில, களுத்துறை, மாத்தளை, எல்பிட்டிய, மொனராகலை, புத்தளம், மற்றும் அநுராதபுரம் ஆகிய மாவட்ட நீதிபதிகள் இடமாற்றம் செய்யப்பட்டுள்ளனர். (நி-5)

# வற்வரித் தொகையானது 105 வீதத்தால் அதிகரிப்பு

(கொழும்பு)

2024 ஆம் ஆண்டில், 4 உறுப்பினர்களைக் கொண்ட ஒரு குடும்பம் மாதாந்தம் 20 ஆயிரத்து 467 ரூபாவை வற் வரியாக செலுத்த வேண்டும் என பேராதனைப் பல்கலைக் கழகத்தின் பொருளாதாரக் கற்கைப் பிரிவின் பேராசிரியர் வசந்த அத்துகோரள தெரிவித்துள்ளார்.

2023 ஆம் ஆண்டில், 4 உறுப்பினர்களைக் கொண்ட ஒரு குடும்பம் மாதாந்தம் 9 ஆயிரத்து 941 ரூபாவை வற் வரியாக செலுத்தி வருகின்றது.

இதன்படி, இந்த வருடத்துடன் ஒப்பிடுகையில், அடுத்த வருடம் செலுத்தப்பட வேண்டிய வற் வரித் தொகையானது 105 சதவீதத்தால் அதிகரித்துள்ளதாக பேராசிரியர் குறிப்பிட்டுள்ளார்.

இதேவேளை, 2024 ஆம் ஆண்டு அரசாங்கம் எதிர்பார்க்கும் மறைமுக வரி வருமானம் 2 ஆயிரத்து 740 பில்லியன் ரூபாவாகும் என்பது குறிப்பிடத்தக்கது. (நி-5)

# ஐக்கிய மக்கள் சக்தியுடன் இணையத் தயார்-பீரிஸ் அதிரடி

(கொழும்பு)

ஐக்கிய மக்கள் சக்தியுடன் இணைந்து பரந்துபட்ட எதிர்க்கட்சியை கட்டியெழுப்பவுள்ளதாக பாராளுமன்ற உறுப்பினர் பேராசிரியர் ஜீ.எல்.பீரிஸ் தெரிவித்துள்ளார்.

ஊடகங்களுக்கு வழங்கிய பேட்டி ஒன்றிலேயே பேராசிரியர் ஜீ.எல்.பீரிஸ் இதனைக் குறிப்பிட்டுள்ளார்.

அவர் மேலும் கருத்துத் தெரிவிக்கையில்,

ஜனவரி முதலாம் திகதி முதல் பொருட்களின் விலைகள் 2 முறையில் அதிகரிக்கும்.

மிகவும் ஆபத்தான பொருளாதாரக் கொள்கைகளை நடைமுறைப்படுத்துவதற்கு எதிராக மக்களைப் பாதுகாப்பதே தமது எதிர்பார்ப்பு.

அத்துடன் ஐக்கிய மக்கள் சக்தியுடன் இணைந்து பரந்துபட்ட எதிர்க்கட்சியை கட்டியெழுப்ப உள்ளதாகவும் ஜீ.எல். பீரிஸ் தெரிவித்துள்ளார். (நி-5)



# டெங்கு ஒழிப்பு வேலைத்திட்டம் இன்று முதல் ஆரம்பம்

(கொழும்பு)

இன்று முதல் 5 நாட்களுக்கு நாடளாவிய ரீதியில் டெங்கு ஒழிப்பு வேலைத்திட்டம் முன்னெடுக்கப்படவுள்ளதாக தேசிய டெங்கு ஒழிப்புப்பிரிவு தெரிவித்துள்ளது.

பருவப்பெயர்ச்சி மழை தீவிரமடைந்துள்ள நிலையில், டெங்கு நோயாளர்களின் எண்ணிக்கை சடுதியாக அதிகரித்துள்ளதாக தேசிய டெங்கு ஒழிப்புப் பிரிவின் பணிப்பாளர் நளின் ஆரியரத்ன தெரிவித்துள்ளார்.

வடக்கு, கிழக்கு, மேல், தென், சப்ரகமுவ, மத்திய மாகாணங்களில் இந்த விசேட டெங்கு ஒழிப்பு வேலைத்திட்டம் முன்னெடுக்கப்படவுள்ளதாக அவர் தெரிவித்தார். (நி-5)


## கிருஸ்ணா அடைவு கடை

**பதிவு இல J/DS/BR/472**

மேற்குறிப்பிட்ட எமது ஸ்தாபனத்தில் 2023 ஆம் ஆண்டு 31.03.2023 இற்கு முன்னர் அடகு வைத்த நகைகள் யாவற்றையும் 2024 ஆம் ஆண்டு ஜனவரி மாதம் 15 ஆம் திகதி (15.01.2024) இற்கு முன்னர் மீட்கவும்.
மீட்க முடியாவிட்டால் ஒரு பகுதி பணத்தைக் கட்டிப் புதுப்பித்துக் கொள்ளவும். புதுப்பிக்க தவறின் 15.01.2024 ஆம் திகதியன்று விற்கப்படும் என்பதனை வாடிக்கையாளர்களுக்கு அறியத்தருகின்றோம்.

**குறிப்பு:- 2023 ஆம் ஆண்டு 3 ஆம் மாதம் 31 ஆம் திகதிக்கு முற்பட்ட நகைகள் யாவும் விற்கப்படும்.**

**இல.370 கே.கே.எஸ் வீதி, யாழ்ப்பாணம்.**
**021 490 0311**
**021 222 5180**
**077 080 4656**

**உரிமையாளர்**
**இல.09, கன்னாதிட்டி வீதி, யாழ்ப்பாணம்.**
**021 222 5046**

(18226)


# ஐ.நா பிரதிநிதியை சந்தித்த செந்தில்

(திருமலை)

ஐக்கிய நாடுகளின் இலங்கைக்கான வதிவிட பிரதிநிதி மார்க் அன்ரே தலைமையிலான உயர்மட்ட குழுவினர் கிழக்கு மாகாண ஆளுநர் செந்தில் தொண்டமானை சந்தித்து கலந்துரையாடினர்.

திருகோணமலையில் அமைந்துள்ள கிழக்கு மாகாண ஆளுநர் செயலகத்தில் குறித்த சந்திப்பானது இடம்பெற்றது. (நி-5)

# சந்தைகளில் நேற்றைய விலை

| மரக்கறி வகைகள் | திருநெல்வேலி ரூபா | மருதனார்மடம் ரூபா | சாவகச்சேரி ரூபா | கிளிநொச்சி ரூபா |
|---|---|---|---|---|
| கத்தரிக்காய் | 500 | 400 | 500 | 400 |
| உருளைக்கிழங்கு | 250 | 220 | 200 | 240 |
| பச்சைமிளகாய் | 1400 | 1300 | 1300 | 1500 |
| தக்காளி | 700 | 650 | 650 | 600 |
| மரவள்ளிக்கிழங்கு | 120 | 120 | 150 | 120 |
| கோவா | 350 | 380 | 350 | 450 |
| கரட் | 400 | 500 | 550 | 700 |
| பூசணி | 180 | 180 | 150 | 200 |
| புடோல் | 300 | 300 | 240 | 300 |
| வாழைக்காய் | 200 | 200 | 200 | 250 |
| சின்ன வெங்காயம் | 400 | 380 | 400 | 500 |
| பெரிய வெங்காயம் | 450 | 400 | 500 | 450 |
| பாகற்காய் | 600 | 600 | 600 | 800 |
| வெண்டக்காய் | 300 | 250 | 240 | 300 |
| கருணைக் கிழங்கு | 120 | 120 | 120 | 150 |
| பயற்றங்காய் | 500 | 350 | 500 | 400 |
| லீக்ஸ் | 350 | 400 | 350 | 400 |
| பீற்றூட் | 400 | 380 | — | 700 |
| கறிமிளகாய் | 800 | 600 | 700 | 600 |
| முருங்கைக்காய் | 1200 | -- | -- | 1600 |
| போஞ்சி | 350 | 400 | 400 | 300 |
| கத்தரிதம்புள்ள | 450 | 300 | 550 | 400 |
| கீரை - 1 பிடி | 150 | 150 | 200 | 200 |
| தேசிக்காய் | 800 | 700 | 600 | 600 |
| தேங்காய் (ஒன்று) | 100 | 100 | 80 | 70-100 |
| இராசவள்ளி | 450 | 600 | 600 | 500 |
| வெங்காயப்பூ | -- | 1400 | -- | -- |
| முள்ளங்கி | 150 | 200 | -- | 300 |
| பொன்னாங்காணி | 100 | 100 | 100 | 60 |
| வல்லாரை | 100 | 40 | 50 | 80 |
| ஈரப்பலா | 200 | 150 | 150 | 200 |

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# லிபியாவில் கவிழ்ந்த புலம்பெயர்ந்தோர் படகு

## 61 பேர் பலி



(திரிபோலி)

ஆபிரிக்க நாடான லிபியா கடற்பகுதியில் புலம்பெயர்ந்தோர் சென்ற படகு ஒன்று விபத்துக்குள்ளானதில் 61 பேர் உயிரிழந்துள்ளதாக புலம்பெயர்வோருக்கான சர்வதேச அமைப்பு தெரிவித்துள்ளது.

இதில் பெண்கள் மற்றும் குழந்தைகள் உள்ளடங்குவதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

கடல் சீற்றம் காரணமாக ஏற்பட்ட பேரலையால் குறித்த படகு விபத்தில் சிக்கியதாக சம்பவத்தில் உயிர் தப்பியோர் தெரிவித்துள்ளனர்.

இந்நிலையில் உயிர் தப்பிய 25 பேர் மீட்கப்பட்டு லிபிய தடுப்பு மையத்திற்கு மாற்றப்பட்டு மருத்துவ உதவி வழங்கப்பட்டு வருவதாகத் தெரிவிக்கப்படுகிறது.

இந்தச் சம்பவத்தில் உயிரிழந்த பலரும் நைஜீரியா, காம்பியா மற்றும் பிற ஆபிரிக்க நாடுகளைச் சேர்ந்தவர்கள் என்பது தெரியவந்துள்ளது.


ஐரோப்பாவில் நுழைய திட்டமிடும் மக்கள் பலர் மத்திய தரைக்கடல் பகுதியைக் கடக்க லிபியாவைத் தெரிவு செய்கின்றனர்.

இந்த ஆண்டில் மத்திய தரைக்கடல்பகுதியைக் கடக்க முயன்ற 2,200இற்கும் மேற்பட்டோர் நீரில் மூழ்கி மரணமடைந்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (ஙி-5)

# இஸ்ரேல் – ஹ

# விரைவில் முடிவுக்

## வெள்ளை மாளி




(வோஷிங்டன்)

இஸ்ரேல் - ஹ
வேண்டும் என்
இறங்கி வந்த
எனவும் வெள்
கிர்பி தெரிவித்

ஹமாஸை ஒழிப்பதற்கு இஸ்ரேலுக்கு அமெரிக்கா முழு ஒத்துழைப்பு அளித்தாலும் காசாவில் நடத்தப்பட்டு வரும் தாக்குதல்களில் பொதுமக்கள் உயிரிழப்பு 19 ஆயிரத்தை நெருங்கி வரும் நிலையில் அமெரிக்கா இவ்வாறு வலியுறுத்தி உள்ளது.

இது குறித்து வெள்ளை மாளிகை செய்தித் தொடர்பாளர் ஜான் கிர்பி மேலும் குறிப்பிடுகையில், “இஸ்ரேலின் டெல்அவிவ் நகரில் அந்த நாட்டுப் பிரதமர் பெஞ்சமின் நெதன்யாகுவை அமெரிக்க தேசிய பாதுகாப்பு ஆலோசகர் ஜேக்கப் சல்லிவன் சந்தித்துப் பேச்சுவார்த்தை நடத்தினார்.

அப்போது, காசாவில் மேற்கொள்ளப்பட்டு வரும் இராணுவ நடவடிக்கைகளின் தீவிரத்தைக் குறைத்துக் கொள்ள வேண்டும் என்று நெதன்யாகுவிடம் சல்லிவன் வலியுறுத்தினார்.

அதற்காக, தீவிரமான தாக்குதல்களுக்குப் பதிலாக இலக்குகளை மட்டும் குறிவைத்து “துல்லியமான” தாக்குதல் நடத்தும் உத்தியைப் பயன்படுத்துவது குறித்து இருவரும் ஆலோசனை நடத்தினர்.

இனிவரும் நாட்களில் அந்த உத்தி நடைமுறைப்படுத்தப்பட

# இஸ்ரேல் இராணுவத்திற்கு உதவி புரியும் கூகுள்

## பணியாளர்கள் போராட்டம்




(வோஷிங்டன்)

கூகுள் நிறுவனம், இஸ்ரேல் அரசு மற்றும் இராணுவத்தோடு இணைந்துள்ள புதிய திட்டமான ப்ராஜக்ட் நிம்பூஸ் (Project Nimbus)ஐ ரத்து செய்யக் கோரி கூகுள் பணியாளர்கள் போராட்டத்தில் ஈடுபட்டுள்ளனர்.

இஸ்ரேல் இந்தத் திட்டத்தின் மூலம் கிடைக்கும் தொழில்நுட்ப வசதிகளைப் போரில் பயன்படுத்தி பாலஸ்தீனர்களைக் கொல்வதாகப் போராட்டக்காரர்கள் கூறுகின்றனர். அமெரிக்காவில் கூகுள் அலுவலகத்திற்கு முன்னால் நூற்றுக்கணக்கான பணியாளர்கள் போராட்டத்தில் ஈடுபட்டுள்ளனர்.

“இனப்படுகொலைக்கு துணை நிற்காதே” “இனப்படுகொலையால் லாபம் ஈட்டாதே” என்பது போன்ற குறியீட்டுப் பலகைகளை ஏந்தி கோஷமெலுப்பி தங்கள் எதிர்ப்பைத் தெரிவித்து வருகின்றனர்.

இந்த ஒப்பந்தத்தின் மூலம் இஸ்ரேல் இராணுவத்திற்குக்ளவுட் வசதிகளை அளிக்க கூகுள் முடிவு செய்துள்ளதாகக் கூறப்படுகிறது.

அதாவது சக்திவாய்ந்த கணனி வளங்களை எல்லா இடங்களுக்கும் கொண்டு செல்ல முடியாததால் கூகுள் தகவல்கள் மற்றும் கணனி வளங்களை க்ளவுட் வசதிகள் மூலம் எங்கிருந்து வேண்டுமானாலும் பெற்றுக்கொள்ளலாம்.

ஏற்கனவே இஸ்ரேல் இராணுவம் புதிய செய்யறிவு தொழில்நுட்பத்தைப் போரில் பயன்படுத்தி வருவதாகத் தெரிவித்துள்ள நிலையில் கூகுளை இந்தத் திட்டத்திலிருந்து விலகுமாறு போராட்டக்காரர்கள் வலியுறுத்தி வருகின்றனர்.


இதுகுறித்து பேசும் போராட்டக்காரர்கள் இனப்படுகொலையாளர்களுக்கு தொழில்நுட்ப வசதிகளை வழங்கக்கூடாது எனத் தெரிவிக்கின்றனர்.

மேலும், இதற்கு பதிலளிக்கும் கூகுள், இந்தத் திட்டத்தின் மூலம் இஸ்ரேலின் பொருளாதாரம், சுகாதாரம், கல்வி மற்றும் போக்குவரத்து ஆகியவை மட்டுமே பயன்பெறுகின்றன. போருக்கும் இந்தத் திட்டத்திற்கும் தொடர்பில்லை எனத் தெரிவித்துள்ளது. (ஙி-5)

# ஒரு வாரத்தி

# வீரர்களை

## அறிக்கை



(கீவ்)

ஒரு வருடத்திற்கும் மேலாக உக்ரைன் -ரஷ்யப்போர் இடம்பெற்று வருகின்ற நிலையில் கடந்த வாரத்தில் மட்டும் 6,700 இராணுவ வீரர்களை ரஷ்யா இழந்து இருப்பதாக உக்ரைன் தெரிவித்துள்ளது.

உக்ரைன் -ரஷ்யா இடையிலான போர் நடவடிக்கை 2022ஆம் ஆண்டு பெப்ரவரி 24 ஆம் திகதியில் தொடங்கி இடைவிடாமல் தொடர்ந்து தாக்குதல்

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

## வெளிநாடு

# …ஹமாஸ் போர்
# …க்கு வரவேண்டும்
## …ரிகை வலியுறுத்து

(…ிங்டன்)


…ல் - ஹமாஸ் போர் கூடிய விரைவில் முடிவுக்கு வர … என்றே விரும்புவதாகவும் ஹமாஸ் அமைப்பினர் … வந்தால் போர் இப்போதே முடிவுக்கு வந்துவிடும் … வெள்ளை மாளிகை செய்தித் தொடர்பாளர் ஜான் …ரிவித்துள்ளார்.

… லாம். ஆனால் அது எப்போது என்று இப்போதே கூற முடியாது. ஹமாஸ் அமைப்பினரிடமிருந்து தங்களைப் பாதுகாத்துக்கொள்ள இஸ்ரேலுக்கு உரிமை உள்ளது.

அந்த உரிமையை தொடர்ந்து மதிக்கிறோம். இருந்தாலும், பொதுமக்கள் உயிரிழப்பைத் தவிர்க்க வேண்டியதும் அவசியமாகும். இது குறித்து விவாதிப்பதற்காகத் தான் சல்லிவன் இஸ்ரேல் சென்றுள்ளார். (நி-5)



# கனடாவில் கண்டறியப்பட்ட கொடிய நோய்க்கிருமி
## 6 பேர் உயிரிழப்பு



(ஒட்டாவா)

கனடாவில் கிர்ணி பழங்களில் சால்மோனெல்லா என்னும் கொடிய நோய்க் கிருமியொன்று இருப்பது கண்டறியப்பட்டுள்ளது.

குறித்த நோய்க்கிருமியால் பாதிக்கப்பட்ட பழங்களை உட் கொண்டமையினால் இதுவரை ஆறுபேர் வரை உயிரிழந்துள்ளனர்.

இந்நிலையில், அந்தப் பழங்களை உட்கொள்ள வேண்டாம் என கனேடிய பாதுகாப்பு நிறுவன அதிகாரிகள் அந்நாட்டு மக்களை எச்சரித்துள்ளனர்.

மேலும், இந்த நோய்க் கிருமியால் 153 பேர் வரை பாதிப்படைந்துள்ளதுடன் அவர்களில் 53 பேர் வைத்திய சாலைகளில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

பொதுவாக இந்த சால் மோனெல்லா கிருமி, கோழி இறைச்சியுடன் தொடர்புடையதாகவும் சரியாக வேக வைக்கப் படாத கோழி இறைச்சியை உண்பவர்களுக்கு இந்தக் கிருமி பாதிப்பை ஏற்படுத்துவதாகத் தெரிவிக்கப்படுகிறது. (நி-5)

# …த்தில் ஆயிரக்கணக்கான …ளை இழந்த ரஷ்யா
## …கை வெளியிட்ட உக்ரைன்



… நடைபெற்று வரும் நிலையில், இதில் லட்சக்கணக்கான இராணுவ வீரர்கள் மற்றும் பொதுமக்கள் கொல்லப்பட்டுள்ளனர்.

இந்நிலையில் நேற்று முன்தினம் உக்ரைன் ஆயுதப் படையின் ஜெனரல் வெளியிட்ட தகவலில், ரஷ்யா கடந்த 7 நாட்களில் மட்டும் 6,700 இராணுவ வீரர்களை இழந்து இருப்பதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

நேற்று முன்தினத்தில் மட்டும் 930 இராணுவ வீரர்களை இழந்து இருப்பதாகவும் இந்த வாரத்தில் உள்ள 3 நாட்களில் ரஷ்யா 1000 இற்கும் அதிகமான வீரர்களை இழந்து இருப்பதாகவும் அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

மேலும் இதனுடன் ரஷ்யா 88 டாங்கிகளையும் இழந்து இருப்பதாகவும் போர் தொடங்கியதில் இருந்து இதுவரை 5,720 டாங்கிகளை ரஷ்யா இழந்து இருப்பதாக உக்ரைன் தெரிவித்துள்ளது.

கடந்த ஒக்டோபரில் பிரித்தானிய பாதுகாப்பு அதிகாரிகள் வழங்கிய தகவலில் 1,90,000 வீரர்களை ரஷ்ய ராணுவம் இழந்து இருப்பதாக தெரிவித்து இருந்தது.

இதனை தொடர்ந்து டிசெம்பர் 12 ஆம் திகதி அமெரிக்க உளவுத்துறை வெளியிட்ட அறிக்கையில் ரஷ்யா 3,60,000 வீரர்களை இழந்து இருப்பதாக தெரிவித்து இருந்தது குறிப்பிடத்தக்கது. (நி-5)

# கர்ப்பிணி பெண்ணின் உயிரை காப்பாற்றிய ஸ்மார்ட் வாட்ச்




(வோஷிங்டன்)

கர்ப்பிணிப் பெண்ணின் இதயத் துடிப்பு சீராக இல்லை என்று ஸ்மார்ட் வாட்ச் மெசேஜ் அனுப்பியதை அடுத்து அந்த கர்ப்பிணிப் பெண் தகுந்த நேரத்தில் மருத்துவமனை சென்று சிகிச்சை எடுத்துக் கொண்டதால் காப்பாற்றப்பட்டார்.

ஆப்பிள் ஸ்மார்ட் வாட்ச் தனக்கு உதவி செய்து, தன் உயிரைக் காப்பாற்றியதாக அமெரிக்க பெண் ஒருவர் நெகிழ்ச்சியாகத் தெரிவித்துள்ளார்.

குறித்த சம்பவம் தொடர்பில் மேலும் தெரியவருவதாவது,

அமெரிக்காவின் சான் பிரான்சிஸ்கோ நகரில் வசித்து வரும் வெரோனிகா என்ற இளம் பெண் நிறை மாத கர்ப்பிணியாக இருந்தார்.

அவர் ஆப்பிள் வாட்ச் அணிந்திருந்த நிலையில் அதிலிருந்து அவரது தொலைபேசிக்கு நோட்டிபிகேஷன் அனுப்பப்பட்டது.

அதில் அவருடைய இதயத் துடிப்பு சாதாரண அளவை தாண்டி இருப்பதாகவும் இன்னும் சில நிமிடத்தில் மூச்சு விடுவதில் சிரமம் இருக்க வாய்ப்பு இருப்பதாகவும் அந்த மெசேஜ் இருந்தது. இதனைப் பார்த்த அவர் உடனடியாக மருத்துவமனைக்குச் சென்று சிகிச்சை எடுத்துக் கொண்டார்.

அவரது நிலைமையை உணர்ந்து கொண்ட மருத்துவர்கள் உடனடியாக சிசேரியன் மூலம் குழந்தையை வெளியே எடுத்து தாய், சேய் ஆகிய இருவரையும் காப்பாற்றினர்.

மேலும் கர்ப்பிணிப் பெண்ணை காப்பாற்றுவதற்கு உறுதுணையாக இருந்தது ஆப்பிள் வாட்ச் என்பதை அறிந்து அவரது குடும்பத்தினர் மகிழ்ச்சி அடைந்துள்ளனர். (நி-5)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வாரம் ஒரு யாழ்ப்பாணத்து மூலிகை

Botanical Name-Eugenia jumbolan
English Name-Black plum
Family-Myrtaceae.
Sinh- Madon/ Mohodam.

தென்ஆசியா மற்றும் அவுஸ்திரேலியாவைச் சார்ந்தது நாவல் மரம். இந்தியா, இலங்கை போன்ற வெப்பமண்டல பகுதிகளில் வளர்கின்றன. நல்ல சூரிய ஒளியும் நீர் தேங்காத மண்ணும் இதற்கு உகந்தது. வாள்வடிவ இலைகளுடன் 10 மீ உயரம் வளரக் கூடியது. எதிரிலை அடுக்கம் மலர்கள் பசும் மஞ்சள் நிறமுடையவை. கனிகள் நீள் கோண வடிவின. சதைப்பற்றுடன் கருநீல நிறமானவை.

உயர்ந்து கிளைந்து வளரும் பெரும் மரம். எப்பொழுதும் பசிய இலையுடையது. 3 தொடக்கம் 6 அங்குல நீளமும் ஒரு அங்குல அகலமுள்ள தனியிலை. இலை நரம்புகள் நுனியில் இணைந்து இலை விளிம்புக்குள் காணப்படும் இலைக் கோணத்தில் ஒரு பக்கத்தில் உண்டாகும். நுனி வளராப் பூந்துணர் கொத்தாகக் காணப்படும்.


வெண்ணிறமான மலர். 4 புற இதழ்கள் இணைந்து புல்லி விட்டமும் 4 அக விதழ்கள் இணைந்து வெண்மையான, உள் வளைவான அல்லி வட்டத்தையும் கொண்டிருக்கும். மிகப் பல தனித்த மகரந்த தாள்கள் காணப்படும். இரு செல்லுடைய சூலக வட்டம். ஒவ்வொன்றிலும் பல சூல்கள் காணப்படும். ஒரு சூல தண்டு, உருண்டையான சதைக்கனி, கருநீல நிறமானது, இனிப்பானது, கனிச்சாறு ஊதா நிறமானது, வித்திலைகள் சதைப் பற்றானவை.

இவற்றுள் கரு முளை மறைந்திருக்கும். மலையிடத்தும் கடலோரப் பகுதிகளிலும் வளர்கின்ற மரமாகும். இதன் கனிக்காகவும் வளர்க்கப்படுகின்றது. இம்மரம் வன்மையானது, செம்பழுப்பு நிறமானது, விதைகள் மூலம் இனவிருத்தி செய்யலாம்.

இம்மரம் தை-மாசி மாதங்களில் இலைகளை உதிர்க்கும். பூக்கள் பங்குனி-வைகாசி மாதங்களில் உண்டாகும். நாவல் பழங்கள் ஆவணி- புரட்டாதி மாதங்களில் கிடைக்கும்.

**இனவிருத்தியும் பரம்பலும்**

பெரும்பாலும் சாலை ஓரங்களில் குளக்கரை ஆற்றங்கரைகளில் நாவல் மரங்கள் வளர்க்கப்படுகின்றன. பெரும்பாலும் விதை மூலமும் ஒட்டுச் செடிகள் மூலமும் இதன் பெருக்கம் செய்யப்படுகின்றது.




இவை 12 மீற்றர் X 12 மீற்றர் இடைவெளியினில் நடப்படுகின்றன. நட்ட 8-10 ஆண்டுகளில் விளைவுக்கு வரும். ஒரு மரத்திலிருந்து சராசரியாக ஆண்டொன்றுக்கு 50-80 கிலோ பழங்கள் கிடைக்கும்.

**மருத்துவப் பயன்கள்**

நாவல் இலைக் கொழுந்தை இடித்து பிழிந்த ரசம் ஒரு தேக்கரண்டி எடுத்து அதில் இரண்டு ஏலரிசியும் இலவங்கப்பட்டை, 2 கிராம் தூள் செய்து காலை, மாலை இருவேளை எடுக்க அஜீரணம் சம்பந்தப்பட்ட பேதி உஷ்ணபேதி தீரும். சிறுவர்களுக்கு இரண்டு நாவல் இலைக் கொழுந்து,2 மாவிலைக் கொழுந்து இவ்விரண்டையும் ஒரு பிடி சேர்த்து மை போல அரைத்து 5 கிராம் அளவு 20 மில்லி தயிரில் காலையில் இரண்டு முதல் 4 நாட்கள் பருக சீதபேதி, இரத்த பேதி, வயிற்றுக்குத்து, தீராப் போரும் நீபதி என்பிலை தணியும்.

குழந்தைகளுக்கு நாவல் மர இலையை மட்டும் அரை



த்து உடம்பெல்லாம் தடவி உடனே வெந்நீரில் குளிக்க வைக்க சகல பூதகண பாலகிரஹ தோஷமெல்லாம் விலகிப்போகும்.

நாவல் இலைக்கொழுந்துடன் இரண்டு மிளகு சேர்த்து அரைத்த வெந்நீரில் ஒரு சுண்டைக்காயளவு கலந்து கொடுக்க குழிதோஷம் விலகி குழந்தைகளுக்கு போகும் நீரான மலம் கட்டும். நாவல் பழத்தின் மேற்றோலை எத்தனை முறையாயினும் உட்கொள்ள நீர்ப்பெருக்கு, நீர் வேட்கை தீரும். பழச்சாற்றை மணப்பாகு செய்து கொடுக்க பசியை உண்டாக்கிவயிற்றுப் போக்கை நிறுத்தும்.

## நாவல்

கோப்பி, தேநீர் அதிகளவு குடித்தால் அடிக்கடி பித்தவாந்தி ஏற்படும். இதற்கு நாவற் பட்டைக் குடிநீரை கற்கண்டு சேர்த்து 3, 4 வேளை 10-20 மில்லி அருந்த வாந்தி நிற்கும். செரிமாணம் நன்கு நடைபெறும். நாவற்பட்டை எரித்த சாம்பலை தேங்காய் எண்ணெயில் மந்திரித்து போட ஆறாத புண்கள் ஆறும். நாவற்பழங்களிற்கு சீனி சேர்த்து சர்பத் செய்தும் அருந்தலாம். இதனால் இதயம் பலப்படும். குருதி ஊறும். இதயத்தசைகள் உறுதிப்படும்.

**நாவற்பழம் பழப்பாகு**

பழச்சாறு 1/2 லீற்றர், கற்



கண்டு-300கிராம், ஏலம்-1கிராம், பன்னீர்-30 மி.லீற்றர், குங்குமப்பூ-2கிராம் கலந்து காய்ச்சி மணம் வரும் பதத்தில் வடித்து வைக்கவும். உடற்கட்டுக்கோப்புக்கு சிறந்த பானம். நாவல் வேர் ஊறிய நீரானது கழிச்சல், நீரிழிவு நீக்கும். உடலுக்கு குளிர்ச்சியையும் ஆண்மையையும் தரும். நாவற்பூ,திப்பிலி இரண்டையும் வெயிலில் காய வைத்து, பொடியாக்கி தினமும் காலை, மாலை இருவேளையும் சாப்பிட்டு வந்தால் காச நோய் குணமாகும்.

நாவற்பழத்தை ஒருநாள் விட்டு ஒருநாள் சாப்பிட்டு வர கண் எரிச்சல், கண்ணில் நீர் வடிதல் குணமாகும். நாவல் விதை, அதிவிடயம் இரண்டையும் சமஅளவு எடுத்து பொடி செய்து சாப்பிட்டு வந்தால் இரத்த மூலம் குணமாகும். நாவல் விதை (3கிராம்), பால் சேர்த்து அரைத்துச் சாப்பிட்டால் அதிக இரத்தப்போக்கை நிறுத்தலாம்.

நாவல் விதைகளை சேகரித்து நன்றாக உலர்த்தி இடித்து துணியில் அரிந்து போத்தலில் அடைத்து வைத்துக் கொள்க. காலை, மாலை வெறும் வயிற்றில் 2-4 கிராம் சுத்தமான நீரில் சாப்பிட 4 முதல் 6 நாளில் சிறுநீரில் உள்ள சீனிச்சத்தைக் குறைத்து அதிக சலத்தையும் குறைக்கும்.

நாவல்மரத்தின் ஐந்து இலைகளை அரை லீற்றர் தண்ணீரில் போட்டு குடிநீர் செய்து குடித்தால் வாய்ப்புண், வாய் வேக்காடு குணமாகும். நாவல் இலைத்துளிரை ஒரு கைப்பிடி எடுத்து அரைத்து தயிரில் கலந்து சாப்பிட்டால் மாதவிலக்கின் போது ஏற்படும் அதிகபடியான இரத்தப் போக்கைக் கட்டுப்படுத்தும். நாவல் மரப்பட்டை 20 கிராம், ஒரு லீற்றர் தண்ணீரில் போட்டு கொதிக்க வைத்துக் குடித்தால் தோல் நோய்கள் குணமாகும். நாவல் விதை, சிறு குறிஞ்சா, வெந்தயம், மாம்பருப்பு ஆகியவற்றை சம அளவு எடுத்து அரைத்து பொடி செய்து தினமும் மூன்று கிராம் சாப்பிட்டால் நீரிழிவு நோய் குணமாகும்.

பழம் உடலுக்கும் கண்ணிற்கும் குளிர்ச்சியைக் கொடுக்கும். பழத்தை சாப்பிடும் போது மூளை பலப்படும். ஈரல் நோய் குணமாகும். சிறுநீர் வெளியேறுவது அதிகமாகும். பழத்தை உண்ண ஜீரணமாகும்.

இதன் பழச்சாற்றை வயிற்றோட்டத்தை குணப்படுத்த பயன்படுத்தலாம். பழத்தை குடிநீரிட்டு அருந்த வாய்வுத் தொல்லை நீங்கும் பழச்சாற்றுடன் தேன் கலந்து உண்ண பித்த நோய்கள் அகலும். வெயிலின் தாக்கத்தை குறைக்கும்.

நாவல்பழத்தை உப்பில் போட்டு சாப்பிடுவதால் தொண்டைக் கட்டு உண்டாவது குறையும். பழுக்காத காய்களை நன்கு உலர்த்தி பொடித்து ஒரு தேக்கரண்டி மோரில் கலந்து அருந்த வயிற்றுப்போக்கு குணமாகும்.

நாவல் கொட்டையை நன்கு உலர்த்தி பொடி செய்து அரித்து தினந்தோறும் 2-4 கிராம் வீதம் மூன்று வேளை வெந்நீரில் கலந்து அருந்த நீரிழிவு கட்டுப்படும்.

நாவல் விதைகளை பொடி செய்து மாம்பருப்புத்தூளுடன் சேர்த்து எடுக்க சிறுநீரைப் பெருக்கும். நாவில் கொழுந்துச்சாறு, மாவிலைச்சாறு இரண்டையும் கலந்து கடுக்காய் பொடியுடன் சேர்த்து ஆட்டுப் பாலில் கலந்து கொடுக்க சீதக் கழிச்சல் நீங்கும்.

நாவல் கொழுந்தை ஏலத்துடன் சேர்த்து வைத்து ஆட்டுப்பாலில் கலந்து கொடுக்க செரியா கழிச்சல் தீரும். நாவல் மரப்பட்டை குடிநீரை / சாற்றை வாய் கொப்பளித்து வர நாக்கு, வாய், தொண்டை புண்கள் தீரும்.



டாக்டர் (திருமதி) விவியன் சத்தியசீலன்
M.D(Siddha)India
சிரேஷ்ட விரிவுரையாளர்
சித்தமருத்துவத்துறை
யாழ்.பல்கலைக்கழகம்

மரப்பட்டையை பொடித்து, இடித்து அரிந்து 1-2 கிராம் அளவு தயிரில் காலை. மாலை அருந்த பெண்களுக்கு மாதவிடாய் காலத்தில் ஏற்படும் அதிக இரத்தப் போக்கு தணியும்.

நாவலில் மரப்பட்டைத் தூளை நுண்ணிய பொடியாக்கி இரத்தம் வழிகின்ற புண்ணில் தூவ குணமாகும். 1 பட்டைக் குடிநீரை கொண்டு புண்களை கழுவலாம்.

நாவல் வேர் ஊறிய குடிநீர் 30-60மில்லி லீற்றர் நீரிழிவு நோயாளிகளுக்கு கொடுக்க இரத்தத்தில் குளுக்கோஸின் அளவு கட்டுப்படும்.

நீரிழிவு நோய்க்கு நாவற் கொட்டை உடைத்த பருப்பை இரு நீண்டாப் பாளைச் சாற்றில் ஊறவைத்து மீண்டும் காயவைத்து உலர்த்திய தூளை 5-10 கிராம் அளவு காலை, மாலை கொடுக்க இரத்தத்தின் குளுக்கோஸின் அளவை கட்டுப்பாட்டில் வைத்திருக்கும்.

நாவல் விதை, தேற்றான் விதை இரண்டையும் சம அளவு எடுத்து பொடி செய்து சாப்பிட்டு வந்தால் உள் மூலம், கீழ்மூலம், இரத்த மூலம் குணமாகும்.

நாவல் பருப்பு, சீரகம் இரண்டையும் சம அளவு எடுத்து எலுமிச்சம்சாற்றில் கலந்து சாப்பிட்டால் இரத்த அழுத்தம் குணமாகும். நாவல் பழத்தை மாதவிலக்கு வருவதற்கு ஒரு வாரம் முன் சாப்பிட்டால் மாதவிலக்கு தள்ளிப்போகும்.

**100 கிராம் நாவல் பழத்தில் உள்ள சத்துக்கள்.**

ஈரலிப்பு- 83.7 கிராம், கலோரி-62 Kcal, புரதம்-0.7கிராம்,கொழுப்பு-0.3 கிராம்,காபோவைதரேற்று-14 கிராம்,கல்சியம்- 15 கிராம், இரும்பு-11.5 கிராம், கரோட்டின்-48 mcg, தயமின்-30 mcg,ரைபோபிளோவின்-10mcg,நியாசின்-0.2 mcg, விற்றமின் C-18mg, கழிவு-34 %.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அனைத்துக் குளங்களும் வான்பாய்வதால் அவதானத்துடன் செயற்படுமாறு அறிவுறுத்து

(நெளுக்குளம்)

அனைத்து குளங்களும் வான் பாய்வதால் மக்கள் அவதானமாக இருக்குமாறும் ஆபத்துக்கள் ஏற்படும் பட்சத்தில் கிராம சேவையாளரின் உதவியுடன் பாதுகாப்பான இடங்களுக்கு செல்லுமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள் என அனர்த்த முகாமைத்துவ பிரிவினால் நேற்று வெளியிட்டுள்ள அறிக்கையில் இவ்வாறு தெரிவிக்கப்பட்டுள்ளது.மேலும் தெரிவிக் கப் பட் டுள் ளதாவது,

தற்போது நிலவி வருகின்ற மழையுடன் கூடிய கால நிலையானது எதிர்வரும் 20 ஆம் திகதி வரை தொட ரக் கூடிய சாத்தியப்பாடுகள் காணப்படுவதுடன், மேலுமொரு குறைந்த காற்றழுத்தம் எதிர் வரும் 24ஆம் திகதி அளவில் உருவாகி அதன் மூலமும் மழைவீழ்ச்சி வடக்கு மாகாணத்துக்கு அதிக அளவு கிடைக்கக்கூடிய சந்தர்ப்பங்கள் காணப்படுகின்றது.

இவ்வாறு கிடைக்கின்ற மழை வீழ்ச்சியானது மிக கனதியாக குறுகிய நேரத்தில் கிடைப்பதனால் குடியிருப்பு பகுதிகள் மற்றும் வீதிகள் தாழ்வான இடங்களில் வெள்ள நீர் தேங்கி நிற்கக்கூடிய சாத்தியப்பாடுகள் காணப்படுவதுடன் நீர் வழிந்து ஓட முடியாத நிலைமையையும் காணப்படுகின்றது.

அத்தோடு முல்லைத்தீவு மற்றும் கிளிநொச்சி மாவட்டங்களில் உள்ள அனைத்து குளங்களும் வான்பாய்ந்து கொண்டிருக்கின்றன.

எனவே குளங்களின் கீழ் பகுதிகளில் வாழ்கின்ற மக்கள் மிகவும் அவதானமாக இருக்குமாறு கேட்டுக் கொள்ளப் படுவதுடன் ஆபத்துக்கள் ஏற்படும் பட்சத்தில் கிராம சேவையாளரின் உதவியுடன் பாதுகாப்பான இடங்களுக்கு செல்லு மாறும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (நி-5-299)

# கழிவகற்றும் செயற்பாடுகள் மன்னாரில் ஸ்தம்பிதம்

## தொற்றுநோய்கள் பெருகும் அபாயம்



(மன்னார்)

மன்னார் நகரசபைக்கு சொந்தமான பாப்பமோட்டை பகுதியில் அமைந்துள்ள திண்ம கழிவு முகாமைத்துவ நிலையம் தற்காலிகமாக மூடப் பட்டுள்ளதால் நகரசபையினால் திண்மக்கழிவு மற்றும் மலக்கழிவு அகற்றும் செயற் பாடுகள் நிறுத்தப்பட்டுள்ளன.

இந்த நிலையில் மன்னார் பொது வைத்தியசாலையில் பத்து நாட்களுக்கு மேலாக மருத்துவக்கழிவு, உணவுக்கழிவு மற்றும் மலக்கழிவுகள் அகற்றப்படாமையினால் மன்னார் பொது வைத்தியசாலைக்குரிய பிராந்திய சுகாதார கழிவகற்றல் நிலையம் சுகாதார சீர் கேட்டுக்கு உள்ளாகியுள்ளதுடன் துர்நாற்றமும் வீசி வருகின்றது

அதேநேரம் நோயாளர் விடுதிகளில் உள்ள மலசல கூடங்கள் நிறைந்து வழிவதனால் விடுதிகளை நோயாளர்கள் பயன்படுத்த முடியாத நிலை காணப்படுவதுடன் மழை காரணமாக டெங்கு நோயும் பெருகும் அபாயமும் ஏற்பட்டுள்ளது.தொடர்சியாக கழிவகற்றல் செயற்பாடுகள் முன்னெடுக் கப்படாத பட்சத்தில் விடுதிகளை மூடவேண்டிய நிலை ஏற்படும் என்பதுடன் ஏற்கனவே சேக ரிக்கப்பட்டு களஞ்சியப்படுத்தப்பட்ட குப்பைகளினால் தொற்று நோய்களும் ஏற்பட வாய்ப்பும் காணப்படுகின்றது.

வைத்தியசாலை மாத்திரமின்றி பொது இடங்கள், வீடுகள், அலுவலகங்கள் உணவங்களிலும் குப்பைகள், அகற்றப்படாத நிலையே காணப்படுகின்றது. எனவே குறித்த விடயம் தொடர்பில் சம்பந்தப்பட்ட அதிகாரிகள் விரைந்து நடவடிக்கை மேற்கொள்ள வேண்டும் என்பதுடன் தீர்வை வழங்க முடியாத பட்சத்தில் மாற்று வழிகளையாவது மேற் கொண்டு தருமாறு மன்னார் மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர். (நி-5-285)



வவுனியா பூந்தோட்டம் கைஷ்மிசமேத நரசிங்கர் ஆயைத்தின் கல்வி சமூக அபிவிருத்தி நிதியத்தின் ஏற்பாட்டில் இலவசக் கற்றல் வகுப்புக்கள் ஆரம்பிக்கும் நிகழ்வு நரசிங்கர் ஆலய கலாசார மண்டபத்தில் நேற்று இடம்பெற்றது. (படம்- வசந்தரூபன்)

# இலட்சார்ச்சனைப் பெருவிழா

(யாழ்ப்பாணம்)

மருதனார்மடம் அருள்வளர் ஸ்ரீ சுந்தர ஆஞ்சநேயர் கோயில் ஹனுமந் ஜெயந்தி இலட்சார்ச்சனைப் பெருவிழா இம்மாதம் 29 ஆம் திகதி ஆரம்பமாகி ஜனவரி மாதம் 10 ஆம் திகதி வரை நடைபெறவுள்ளது.

ஜனவரி மாதம் 8 ஆம் திகதி திங்கட்கிழமை மாலை 5 மணிக்கு இலட்சார்ச்சனைப் பூர்த்தி விழா இடம்பெறவுள்ளது. (நி-5)

# facebook (f) ஃபேஸ்புக் பார்த்ததில் பிடித்தவை... Like 2993

விதுஷா

என் மாமியார் ரயிலில் இருந்து கீழே விழுந்துட்டாங்க... உடனே செயினை பிடிச்சி இழுக்கலையா?
இழுத்தேன், செயின் மட்டும் தான் வந்தது. மாமியார் விழுந்துட்டார்.



லக்ஷுமி

பரீட்சைக்கு நல்லா படிச்சிட்டு போறவன் தான்யா பதட்டமாவும் பரபரப்பாவும் இருப்பான்.
ஆனா நாங்க ரிலாக்சா இருப்போம்...
ஏன்னா நாங்க எழுதுறது தான்யா பதிலு...




மங்கை

ஹோட்டல்ல ஒரு பொண்ணு வந்து சிங்கிளான்னு கேட்டா...
நானும் சந்தோசமா ஆமான்னு சொன்னேன்.
அப்போ எதுக்கு ரெண்டு சேர்ன்னு ஒன்று எடுத்துட்டு போய்ட்டா...



சுதர்சன்

மாதா பிதா கூகுள் தெய்வம்
கூகுல் ஆ.... ஏன்டா "குரு" ல வரும்.



எது தெரிலனாலும் Google கிட்ட தான் கேக்குறோம் எத கேட்டாலும் சொல்லி தருது அப்ப 'Google' தானே குரு.


விதுரன்

பேட்டரி இப்படி வெயிலில் வச்சா சார்ஜ் ஏறிவிடும் அப்புறம் ரிமோட் காருக்கு போட்டு ஓட்டலாம்




குப்தன்

ஜனவரி முதல் நாள் காலை 6 மணி




ஜனவரி ஆறாம் நாள் காலை 10 மணி

நீங்கள் பார்த்த பேஸ்புக்கில் உங்களுக்குப் பிடித்தவை இருந்தால் www.facebook.com/valampurii எனும் தளத்தில் பதிவு செய்யுங்கள். அவை உங்கள் பெயருடன் facebook பார்த்ததில் பிடித்தவை பகுதியில் பிரசுரமாகும்.

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org






"இவன் சிநேகிதன் கொண்டு போன ஓலை இளைய பிராட்டி குந்தவை எழுதிய ஓலையா? உனக்கு அந்த விஷயம் எப்படித் தெரிந்தது?" என்று பழுவேட்டரையர் கேட்டார்.

"பின்னே எதற்காக என்னிடம் மந்திரவாதி அடிக்கடி வருகிறானாம்? அவன் மந்திரத்தின் மூலமாகத் தெரிந்தது. என் மைத்துனர் ஆட்களின் இலட்சணம்தான் தெரிந்திருக்கிறதே! பழுவூர் பனை இலச்சினை அவனிடம் இருப்பதாக கண்டு பிடித்துக் கொண்டு வந்து சொன்னவர்கள் ஓலை குந்தவை அனுப்பியது என்று சொல்லவில்லை, பாருங்கள்!"

"இலச்சினையைப் பற்றி நம் ஆட்கள் சொல்லவில்லை அன்பில் பிரமராயர் இராமேசுவரம் போய்விட்டுத் திரும்பி வந்திருக்கிறார். அவர் கொண்டுவந்த செய்தி"

"அந்தப் பிராமணனாவது குந்தவை தேவியின் ஓலையைப் பற்றித் தங்களிடம் சொன்னாரா?"

"இல்லை."

"நாதா! நான் தங்களுக்கு எச்சரித்ததை எண்ணிப் பாருங்கள். இந்த இராஜ்யத்தில் உள்ள அவ்வளவு பேரும் சேர்ந்து தங்களை வஞ்சிக்கப் பார்க்கிறார்கள் என்று நான் சொல்லவில்லையா? இது உண்மை என்பது இப்போதாவது தங்களுக்குத் தெரிகிறதா? மந்திரவாதி சொன்னதை மட்டும் நான் நம்பிவிடவில்லை.

கோடிக்கரையிலிருந்து சிறைப்படுத்திக் கொண்டு வந்த வைத்தியர் மகனையும் அழைத்து வரச் செய்து விசாரித்தேன். அவனும் அதை உறுதிப்படுத்தினான். இளையபிராட்டி தன் தம்பிக்கு ஓலை அனுப்பியிருப்பதாகச் சொன்னான்!" என்றாள் நந்தினி.

பழுவேட்டரையருக்குக் கண்ணைக் கட்டிக் காட்டிலே விட்டது போலிருந்தது. கந்தன் மாறனை அவர் அருவருப்புடன் பார்த்தார்.

அந்தச் சிறு பிள்ளையைப் பக்கத்தில் வைத்துக் கொண்டு இப்படியெல்லாம் பேசுவது அவருக்குப் பிடிக்கவில்லை.

இதைக் குறிப்பினால் உணர்ந்த நந்தினி, "நம்முடைய கதை இருக்கவே இருக்கிறது. இவருடைய பிரயாணம் ஏன் தாமதிக்க வேண்டும்!" என்று கூறிவிட்டுக் கந்தன் மாறனைப் பார்த்து "ஐயா! காஞ்சி இளவரசரிடம் இந்த ஓலையை நேரே கொண்டு போய்க் கொடுக்கவேண்டும்.

கொடுத்துவிட்டு, அவர் மறு ஓலை கொடுத்தால் சர்வ ஜாக்கிரதையாக அனுப்பி வைக்க வேண்டும். தங்களுடைய கடம்பூர் மாளிகைக்கு இளவரசரை அழைப்பதற்கு மறந்துவிட வேண்டாம்!" என்றாள்.

"என் தந்தையிடம் என்ன சொல்ல? இது பழுவூர் மன்னரின் விருப்பம் என்று சொல்லலாம் அல்லவா?" கந்தன் மாறன் சற்றுத் தயக்கத்துடன் கேட்டான்.

"தாராளமாகச் சொல்லலாம். என்னுடைய விருப்பந்தான் பழுவூர் மன்னரின் விருப்பமும். நாதா! நான் சொல்வது சரிதானே!" என்றாள் நந்தினி.

"ஆமாம், ஆமாம்!" என்று பழுவேட்டரையர் தலையை அசைத்தார். அவருக்கு ஒன்றும் புரியவில்லை. தலை கிறுகிறுத்தது. நந்தினியை எதிர்த்துப் பேசவும் அவரால் இயலவில்லை.

கந்தன்மாறன் சென்ற பிறகு நந்தினி, பழுவேட்டரையர் மீது தன் காந்தக் கண்களைச் செலுத்தி, கொஞ்சம் கிளியின் குரலில், "நாதர் என்னிடம் தங்களுடைய நம்பிக்கை குன்றிவிட்டதாகத் தோன்றுகிறது! என் மைத்துனருடைய துர்ப்போதனை ஜயித்துவிட்டதுபோல் காண்கிறது!" என்றாள்.

"ஒருநாளுமில்லை நந்தினி! என் கையில் பிடித்த வேலிலும், அரையில் சொருகிய வாளிலும் எனக்கு நம்பிக்கை குறைந்தாலும் உன்னிடம் நம்பிக்கை குறையாது.

வீர சொர்க்கத்தில் நான் நம்பிக்கை இழந்தாலும் உன் வார்த்தையில் நான் நம்பிக்கை இழக்க மாட்டேன்!" என்றார்.


(தொடரும்...)






## காளைமாட்டின் பால்

(தொடர்ச்சி..)



"அத்தகைய காளை மாட்டை இந்த உலகில் யாராவது ஒருத்தரால் கண்டு பிடிக்க முடியும் எனில் அது பீர்பால் மட்டுமே!" என்று கூறிய வைத்தியர், "பிரபு! நீங்கள் ஒரு வாரம் ஓய்வெடுங்கள். இந்த மருந்தை ஒரு நாளைக்கு நான்கு முறை காளை மாட்டுப் பாலில் கலக்கிச் சாப்பிடுங்கள். நீங்கள் குணமாகிவிடுவீர்கள்" என்று சொல்லிவிட்டு மருந்தைக் கொடுத்து விட்டு சென்றார் ஜாலிம்கான்.

உடனே, பீர்பால் அக்பர் முன் வரவழைக்கப் பட்டார். "எப்படி இருக்கிறீர்கள், பிரபு?" என்று பீர்பால் கேட்க, "நீதான் பார்க்கிறாயே பீர்பால்! எனக்குக் கடுமையான காய்ச்சல்! வைத்தியர் மருந்து தந்திருக்கிறார். ஆனால் அதைக் காளை மாட்டுப் பாலில் குழைத்து சாப்பிட வேண்டுமாம்," என்றார் அக்பர்.

"காளை மாட்டின் பாலா?" என்று வியப்புடன் கேட்ட பீர்பால், "காளை மாடு பால்தரும் என்று எந்த மடையன் சொன்னான்?" என்று கேட்டார்.

"ஏன்? வைத்தியர் ஜாலிம்கான் சொன்னார்! அதுவும் உன் ஒருவனால் தான் காளை மாட்டின் பால் கொண்டுவரமுடியும் என்பதையும் உறுதியாகச் சொன்னார்" என்றார் அக்பர். "அப்படியென்று ஜாலிம்கான் சொன்னாரா?" என்று பீர்பால் கேட்டார். "ஆம்!" என்றார் அக்பர்.

தன்னை சிக்கலில் ஆழ்த்தி அவமானப்பட வைக்க ஜாலிம்கான் செய்த சூழ்ச்சி என்று பீர்பாலுக்கு உடனே தெரிந்து விட்டது. பீர்பால் வீட்டுக்குப் போகும் வழியெல்லாம் அதைப்பற்றியே யோசித்துக் கொண்டு சென்றார். விரைவிலேயே அவர் மனத்தில் ஓர் அருமையான யோசனை தோன்றியது. உடனே, வீட்டுக்குச் சென்ற பீர்பால் தன் திறமையான தன் மகளை அழைத்து அரண்மனையில் நடந்ததைக் கூறி, சிக்கலிலிருந்துத் தப்பிக்கத் தான் யோசனை செய்துள்ள திட்டத்தையும் கூறினார்.

அதைக் கேட்ட அவரது மகள் "கட்டாயம் செய்கிறேன் அப்பா!" என்றவள் "அந்த ஜாலிம் கானுக்கு உங்கள் மீது பொறாமையா?" என்று கேட்க, "அவருக்கு மட்டுமல்ல, இன்னும் பலருக்குப் பொறாமை! இருக்கட்டும்! நீ நான் சொன்னபடி இன்றிரவே செய்!" என்றார் பீர்பால்.

நடு இரவும் வந்தது. பீர்பாலின் மகள் ஒரு வேலைக்காரியை உடன் அழைத்துக் கொண்டு ஆற்றங்கரைக்குச் சென்றாள். அக்பருடைய அரண்மனைக்கருகே உள்ள படித்துறையைத் தேர்ந்தெடுத்த அவள், தன்னுடன் கொண்டு வந்திருந்த துணிகளை ஆற்றில் அலசித் துவைக்கத் தொடங்கினாள்.

அக்பரின் படுக்கை அறைக்கு மிக சமீபத்தில் அந்தப் படித்துறை இருந்ததால், பீர்பாலின் மகள் ஓங்கி ஓங்கித் துணிகளை படியில் அடித்த சத்தம் நடுநிசி வேளையில் மிகவும் உரக்கக் கேட்டது. அது போதாதென்று, வேலைக்காரியுடன் சத்தமாக சிரித்துக் கொண்டே பேசினாள்.

அந்த சத்தத்தில் அக்பரின் தூக்கம் கலைந்து போயிற்று. நடு இரவில் யார் இப்படி சத்தம் போடுவது என்று கோபமுற்ற அக்பர் உடனே ஒரு காவற்காரனை அனுப்பினார். காவற்காரனும் யார் அவ்வாறு சத்தம் போடுவது என்றறிய அரண்மனையை விட்டு வெளியே வந்தான். ஆற்றங்கரையில், நடு இரவில் ஓர் இளம் பெண் வேலைக்காரியுடன் சத்தமாக சிரித்துப் பேசிக் கொண்டிருந்ததையும் துணிகளை அடித்துத் துவைத்துக் கொண்டு இருந்ததையும் பார்த்து கோபமுற்றான். (தொடரும்..)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உண்மையை உறுதியாகக் கடைப்பிடிப்பதில் இருந்துதான் வலிமை எல்லாம் கிடைக்கிறது.
– காந்திஜி

வலம்புரி
TP: 021 222 3378
website : www.valampurii.lk

## தொற்று நோய் அபாயம் தடுப்பு நடவடிக்கை அவசியம்

கனத்த மழை காரணமாக வடக்கு கிழக்கு மாகாணங்கள் வெள்ளத்தில் மூழ்கியுள்ளன.

அதிலும் குறிப்பாக வடக்கு மாகாணத்தில் கிளிநொச்சி, முல்லைத்தீவு, மன்னார் மாவட்டங்களில் உள்ள அனைத்துக் குளங்களும் நிரம்பி வான்பாய்கின்றன.

இதனால் தாழ்நிலங்களில் உள்ள வீடுகள் வெள்ளத்தில் மூழ்க, அப்பகுதி மக்கள் பாதுகாப்பான இடங்களுக்குச் சென்று இடைத்தங்கல் முகாம்களில் தங்கியுள்ளனர்.

இன்னும் தொடர்ந்து மழை பெய்யுமாக இருந்தால், நிலைமை மோசமாகும் என்ற சூழ்நிலை காணப்படுகிறது.

எதுஎவ்வாறாயினும் வடக்குக் கிழக்கு மாகாணங்களில் ஏற்பட்ட வெள்ள அனர்த்தத்தால் பாதிக்கப்பட்ட மக்களுக்கும் ஏற்பட்ட சொத்தழிவுகளுக்கும் விவசாய அழிவுகளுக்குமான இழப்பீடுகள் வழங்கப்பட வேண்டும்.

இதுபற்றி நேற்று முன்தினம் (16) இவ்விடத்தில் பிரஸ்தாபித்திருந்தோம்.

தவிர வெள்ள அனர்த்தம் ஏற்பட்ட இடங்களில் தொடர்ந்து தொற்று நோய் பரவக்கூடிய வாய்ப்புகள் அதிகமாக இருப்பதனால், தொற்று நோயிலிருந்து மக்களைப் பாதுகாக்கின்ற தடுப்பு நடவடிக்கைகள் அவசரமாக மேற்கொள்ளப்பட வேண்டும்.

பொதுவில் மழை காலமென்றாலே தொற்று நோய்ப் பரவல் அதிகமாக இருப்பது தெரிந்ததே.

அதிலும் இப்போது வட மாகாணத்தில் குறிப்பாக யாழ்ப்பாணத்தில் டெங்குக் காய்ச்சல் மிக வேகமாகப் பரவி வருகிறது.

இதனால் வைத்தியசாலை விடுதிகள் நோயாளர்களால் நிரம்பி வழிகின்றன.

இந்நிலையில் வடபகுதியில் ஏற்பட்டுள்ள வெள்ளப்பெருக்குக் காரணமாகத் தொற்று நோய்கள் பரவுமாக இருந்தால், நோயாளர்களைப் பராமரிக்க முடியாத நெருக்கடி நிலையை வடக்கிலுள்ள வைத்தியசாலைகள் எதிர்கொள்ளும்.

எனவே வெள்ளப்பெருக்கு ஏற்பட்ட இடங்களில் தொற்று நோய் ஏற்படாமல் இருப்பதை உறுதி செய்வதற்கான தடுப்பு நடவடிக்கைகளை, தொற்று நோய்த் தடுப்புப் பிரிவும் சுகாதார வைத்திய அதிகாரி பணிமனைகளும் மும்முரமாக மேற்கொள்ள வேண்டும்.

அப்போதுதான் தொற்று நோய்ப் பரவலில் இருந்து எமது மக்களைப் பாதுகாக்க முடியும்.

இவ்வாறு வெள்ளப்பெருக்கைத் தொடர்ந்து ஏற்படக்கூடிய தொற்று நோய்ப் பரவலைத் தடுப்பதற்கு மத்திய சுகாதார அமைச்சு போதிய தொற்று நீக்கி மருந்துகளையும் தொற்று நோய்த் தடைக்கான அனைத்து வசதிகளையும் உடனடியாக வழங்க வேண்டும்.

இது தொடர்பில் தமிழ்ப் பாராளுமன்ற உறுப்பினர்கள் சுகாதார அமைச்சுடன் தொடர்பு கொண்டு நிலைமைகளை எடுத்துக் கூறி உரிய நடவடிக்கை எடுப்பதும் அவசியமாகும்.

இதேவேளை தமிழ் மக்களின் பிரதிநிதிகள் அந்தந்த சுகாதார வைத்திய அதிகாரியுடன் தொடர்பு கொண்டு, தொற்று நோய்த் தடுப்பு நடவடிக்கைக்குத் தேவையானவை பற்றிக் கேட்டறிவதும் முக்கியமானது.

இதைச் செய்யும்போதுதான் தொற்று நோய்த் தடையை வெற்றிகரமாக அமுல்படுத்த முடியும்.

# ஐ.எம்.எப் வேலைத்திட்டத்தில் பொறுப்புடன் செயற்படுங்கள்

## அரசியல் தலைவர்களிடம் ஜனாதிபதி கோரிக்கை

(கொழும்பு)

சர்வதேச நாணய நிதியத்துடனான வேலைத்திட்டத்தில் அனைத்து அரசியல் தலைவர்களும் பொறுப்புடன் செயற்பட வேண்டும் என ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க கோரிக்கை விடுத்துள்ளார்.

கண்டியில் நேற்று இடம்பெற்ற நிகழ்வொன்றில் கலந்துகொண்டு உரையாற்றுகையிலேயே அவர் குறித்த கோரிக்கையினை விடுத்திருந்தார்.

மேலும் சர்வதேச நாணய நிதியத்தின் திட்டங்களை ஏற்காத அரசியல் தலைவர்கள் நாட்டினை வங்குரோத்து நிலையில் இருந்து மீட்பதற்கான திட்டங்களை முன்வைக்க வேண்டும்.

எனவே பொறுப்புக்களை ஏற்காமல் வெறுமனே மக்களை மகிழ்விக்கும் வகையிலான கருத்துக்களினை வெளியிடும் அரசியலானது நாட்டை மீண்டும் அதலபாதளத்துக்கு இழுத்துச் செல்லும் எனவும் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க எச்சரிக்கை விடுத்தார். (ந-7)

# பெரும்பான்மையான மக்கள் எம்முடனேயே இருக்கின்றனர்

## ஓய்வுபெறும் எண்ணம் எனக்கில்லை – மகிந்த

(கொழும்பு)

அரசியலிலில் இருந்து ஓய்வு பெறும் எண்ணம் தமக்கு இல்லை என முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.

பெரும்பான்மையான மக்கள் எமது கட்சியுடன் திரண்டுள்ளனர்.

சில மாற்றங்கள் இடம்பெற்ற போதும் அவர்கள் எம்மைவிட்டு விலகவில்லை.

இதை அண்மையில் இடம்பெற்ற எமது கட்சியின் மாநாடு உறுதிப்படுத்தியுள்ளது.

இதேபோல் ஏனைய அரசியல் கட்சிகளும் மாநாடுகளை நடத்தி பலத்தினை நிரூபித்துக் காட்டவேண்டும்.

இம்முறை ஜனாதிபதித் தேர்தலில் போட்டியிடும் தகுதி எனக்கில்லை எனினும், கட்சி தீர்மானிக்கும் வேட்பாளருக்கு ராஜபக்ஷக்கள் ஆதரவளிப்பர் என்றும் கூறிய அவர் ஐக்கிய தேசியக் கட்சியுடன் இணைவது தொடர்பில் தான் எதனையும் அறிவித்திருக்கவில்லை என்றும் தெரிவித்தார். (ந- 7)

## இலங்கையில் பிறப்புவீதம் 25 சதவீதத்தால் வீழ்ச்சி

(கொழும்பு)

கடந்த 10 வருடங்களில் இலங்கையில் பிறப்பு எண்ணிக்கை சுமார் 25 வீதத்தால் குறைந்துள்ளதாக சனத்தொகை மற்றும் புள்ளிவிபரவியல் திணைக்களத்தினால் வெளியிடப்பட்டுள்ள அறிக்கை மூலம் தெரியவருகிறது.

இதன்படி, இவ்வருடத்தில் இலங்கையில் பிறந்தவர்களின் எண்ணிக்கை 365,762 ஆகவும், 2022இல் பிறந்தவர்களின் எண்ணிக்கை 275,321 ஆகவும் உள்ளது. (ந-7)

## யானை தாக்கியதில் ஒருவர் உயிரிழப்பு

(கொழும்பு)

தோட்டத்துக்கு வந்த யானையை விரட்டச் சென்ற நபர் ஒருவர் யானையின் தாக்குதலுக்கு இலக்காகி உயிரிழந்துள்ளார்.

இப்பலோகம பகுதியைச் சேர்ந்த 65 வயதுடைய 5 பிள்ளைகளின் தந்தையே உயிரிழந்துள்ளார்.

வாழை, தென்னை, வெற்றிலை பயிரிடப்பட்டிருந்த தோட்டத்துக்கு வந்த காட்டு யானையை விரட்டச் சென்றபோது, தோட்டத்தில் மறைந்திருந்த மற்றுமொரு காட்டு யானையே இவ்வாறு தாக்கியுள்ளதாக இப்பலோகம பொலிஸார் தெரிவித்தனர். (ந-7)

## விபரீத முடிவெடுத்த குடும்பஸ்தர் மரணம்

(மானிப்பாய்)

மனைவியுடன் ஏற்பட்ட கருத்து முரண்பாடு காரணமாக இளம் குடும்பஸ்தர் ஒருவர் விபரீத முடிவெடுத்து உயிர்மாய்த்துள்ளார்.

நேற்றுக் காலை இடம்பெற்ற குறித்த சம்பவத்தில் மானிப்பாய் வீதி யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த மூன்று பிள்ளைகளின் தந்தையான சிவபாலன் சிவசுதன் (வயது - 40) என்பவரே தூக்கிட்ட நிலையில் சடலமாக மீட்கப்பட்டுள்ளார்.

இம் மரணம் தொடர்பில் யாழ் போதனா வைத்தியசாலையின் திடீர் மரண விசாரணை அதிகாரி நமசிவாயம் பிரேமகுமார் மரணவிசாரணைகளினை மேற்கொண்டார். (ந-7,60)

## மின்சாரம் தடைப்படும்

உயர் அழுத்த மற்றும் தாழ் அழுத்த மின் விநியோக மார்க்கங்களின் கட்டமைப்பு மற்றும் பராமரிப்பு வேலைகளுக்காக நாளை **செவ்வாய்க்கிழமை காலை 8.30 மணியிலிருந்து மாலை 5.00 மணிவரை யாழ். பிரதேசத்தில்** சீனோர் படகுத்துறை- காரைநகர், கடற்படைதளம்-காரைநகர், காரைநகர் கடற்படை முகாம், இ.போ.ச டிப்போ-காரைநகர், களபூமி, பாலக்காடு அம்மன் கோவிலடி-காரைநகர், தோப்புக்காடு-காரைநகர், ஊரி-காரைநகர், உடுப்பிட்டி நூலகம், வல்லை ஆகிய இடங்களிலும் **வவுனியா பிரதேசத்தில்** குடாகச்சக்கொடிய, ஹொரவபொத்தானை வீதி (6ஆவது மைல் போஸ்ட்), குடாகச்சக்கொடியா புதிய வீட்டுத்திட்டம், குடாகச்சக்கொடிய கல் உடைக்கும் ஆலை ஆகிய பிரதேசங்களிலும் மின்சாரம் தடைப்படும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஊழலும் புதிய ஊழல் தடுப்புச் சட்டமும் நீங்கள் தெரிந்து கொள்ள வேண்டியது என்ன?



16

கலாநிதி க.தவலிங்கம்
ஓய்வுநிலை நில அளவையாளர் நாயகம்.
தவிசாளர்- எல்லை நிர்ணய ஆணைக்குழு.

முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவின் 5 வருட ஆட்சிக் காலப்பகுதியில் 292 •வழக்குகளும் (221 - மேல் நீதிமன்றம், 71 - நீதிவான் நீதிமன்றம்) முன்னாள் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவின் 5 வருட ஆட்சிக்காலப்பகுதியில் 363 வழக்குகளும் (230 - மேல் நீதிமன்றம், 133 - நீதிவான் நீதிமன்றம்) முன்னாள் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவின் 2 வருட ஆட்சிக்காலப்பகுதியில் 112 வழக்குகளும் (99 - மேல் நீதிமன்றம், 13 - நீதிவான் நீதிமன்றம்) தாக்கல் செய்யப்பட்டுள்ளன.

இதேவேளை 2010 - 2021 காலப்பகுதிக்குள் அரசியல்வாதிகள், அமைச்சரவை அமைச்சர்கள், பாராளுமன்ற உறுப்பினர்கள் ஆகியோருக்கு எதிராக 85 வழக்குகள் தாக்கல் செய்யப்பட்டுள்ளன. இவற்றில் மேல் நீதிமன்றத்தில் 22 வழக்குகளும் நீதிவான் நீதிமன்றத்தில் 63 வழக்குகளும் தாக்கல் செய்யப்பட்டுள்ளன.

### மீளப்பெற்றுக் கொள்ளப்பட்டுள்ள வழக்குகள்

இலஞ்சம் அல்லது ஊழல் பற்றிய சார்த்துதல்களைப் புலனாய்வு செய்யும் ஆணைக்குழுவினால் 2010 - 2021 ஆம் ஆண்டு காலப்பகுதியில் 79 வழக்குகள் மீளப்பெற்றுக்கொள்ளப்பட்டுள்ளது.

இவற்றில் மேல் நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்டிருந்த 35 வழக்குகளும் நீதிவான் நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்டிருந்த 44 வழக்குகளும் இவ்வாறு மீளப்பெறப்பட்டுள்ளன. மீளப்பெறப்பட்ட வழக்குகளில் 2010 - 2014 காலப்பகுதியில் 17 வழக்குகளும் 2015 - 2019 காலப்பகுதியில் 13 வழக்குகளும் 2020 - 2021 ஆம் ஆண்டு காலப்பகுதியில் 49 வழக்குகளும் மீளப்பெறப்பட்டுள்ளன.

அதிகபட்சமாக 2020 - 2021 காலப்பகுதியில் மேல் நீதிமன்றத்திலிருந்து 20 வழக்குகளும் நீதிவான் நீதிமன்றத்திலிருந்து 29 வழக்குகளும் மீளப்பெற்றுக்கொள்ளப்பட்டுள்ளன. ஏனைய ஆண்டுகளில் ஆறுக்கும் குறைவான வழக்குகளே மீளப்பெறப்பட்டுள்ளன.

மேல் நீதிமன்றத்தில் இருந்து மீளப்பெறப்பட்ட வழக்குகள் மீள வழக்கு தாக்கல் செய்யும் நோக்கத்துடனும் 01/2011 நீதிமன்ற தீர்ப்புக்கிணங்கவும் பெற்றுக்கொள்ளப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது. நீதிவான் நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்ட வழக்குகளில் மீள வழக்கு தாக்கல் செய்யும் நோக்கத்துடனும் 01/2011 நீதி மன்ற தீர்ப்புக்கிணங்கவும் கு.ந.ப. கோவை பிரிவு 186 இற்கு இணங்கவும் வேறு காரணங்களுக்காகவும் வழக்குகள் மீளப்பெறப்பட்டதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

### வழக்குகளுக்காக குற்றத்தீர்ப்பளிக்கப்பட்டவர்கள்

இலஞ்சம் மற்றும் ஊழல் தொடர்பில் ஆணைக்குழுவினால் தாக்கல் செய்யப்பட்ட வழக்குகளின் அடிப்படையில் 2010 - 2021 ஆம் ஆண்டு காலப்பகுதியில் 317 பேர் குற்றமிழைத்தவர்களாக தீர்ப்பளிக்கப்பட்டுள்ளனர். இவற்றில் மேல் நீதிமன்றத்தில் 240 பேரும் நீதிவான் நீதிமன்றத்தில் 77 பேரும் இவ்வாறு குற்றத்தீர்ப்பளிக்கப்பட்டுள்ளனர்.

முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவின் 5 வருட ஆட்சிக் காலப்பகுதியில் 90 பேரும் (71 - மேல் நீதிமன்றம், 19 - நீதிவான் நீதிமன்றம்) முன்னாள் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவின் 5 வருட ஆட்சிக்காலப்பகுதியில் 193 பேரும் (141 - மேல் நீதிமன்றம், 52 - நீதிவான் நீதிமன்றம்) முன்னாள் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவின் 2 வருட ஆட்சிக்காலப் பகுதியில் 34 பேரும் (28 - மேல் நீதிமன்றம், 06 - நீதிவான் நீதிமன்றம்) இவ்வாறு குற்றத்தீர்ப்பளிக்கப்பட்டுள்ளதாக இலஞ்சம் அல்லது ஊழல் பற்றிய சார்த்துதல்களைப் புலனாய்வு செய்யும் ஆணைக்குழு தெரிவித்துள்ளது.

### ஆணைக்குழுவுக்கு கிடைக்கப் பெற்ற முறைப்பாடுகள்

இலஞ்சம் மற்றும் ஊழல் தொடர்பில் ஆணைக்குழுவுக்கு 2010 - 2021 ஆம் ஆண்டு காலப்பகுதியில் 35,698 முறைப்பாடுகள் கிடைக்கப் பெற்றுள்ளன. 2022 ஆம் ஆண்டு (டிசெம்பர் 08) 2300 முறைப்பாடுகள் கிடைக்கப் பெற்றதாக அறியக் கிடைத்தது.

எனினும் கிடைக்கப் பெற்ற முறைப்பாடுகளில் விசாரணைக்கு உட்படுத்தப்பட்டவை மற்றும் நிவாரணங்களை பெற்றுக் கொண்டவர்கள் தொடர்பான தகவல்களை ஆணைக்குழு வழங்கவில்லை.

கிடைக்கப்பெற்ற முறைப்பாடுகளில் 2010-2014 காலப்பகுதியில் 12,828 முறைப்பாடுகளும் 2015 - 2019 காலப்பகுதியில் 16,952 முறைப்பாடுகளும் 2020 - 2021 ஆம் ஆண்டு காலப்பகுதியில் 5921 முறைப்பாடுகளும் கிடைக்கப்பெற்றுள்ளன. இலஞ்சம் மற்றும் ஊழல் ஆணைக்குழுவுக்கு கிடைக்கப்பெற்ற 35,698 முறைப்பாடுகளில் 767 குற்றங்களுக்கே நீதிமன்றில் வழக்குகள் தாக்கல் செய்யப்பட்டுள்ளன. அவற்றில் 79 வழக்குகள் மீளப் பெறப்பட்டுள்ளதுடன் 317 பேர் குற்றமிழைத்தவர்களாக அடையாளம் காணப்பட்டுள்ளனர்.

நாட்டில் இடம்பெற்றதாக கூறப்படும் பாரிய ஊழல் குற்றச்சாட்டுகளுடன் தொடர்புடைய வழக்குகள் நீதிமன்றங்களில் நிலுவையில் இருப்பதுடன் குற்றம் சுமத்தப்பட்டவர்கள் சுதந்திரமாக நடமாடும் நிலையே இலங்கையில் காணப்படுகின்றது. இவ்வாறு இடம்பெற்ற பாரிய ஊழல்கள் நாட்டின் பொருளாதார சரிவில் தாக்கத்தை ஏற்படுத்தியுள்ளதையும் கவனத்தில் கொள்ள வேண்டும்.

### இலஞ்ச, ஊழல் ஆணைக்குழு பற்றி நீதி அமைச்சர் பாராளுமன்றத்தில் தெரிவித்த கருத்து

ஊழல் ஒழிப்பு சட்டத்திற்கு எதிராக சட்ட நடவடிக்கை எடுப்பதற்காக இலஞ்ச - ஊழல் ஆணைக்குழுவின் உறுப்பினர் ஒருவர் இலஞ்சம் பெற்றுள்ளதாக நீதி அமைச்சர் விஜேதாச ராஜபக்ஷ குற்றம் சுமத்தியுள்ளார்.

இலஞ்ச - ஊழல் ஆணைக்குழுவிற்கு உறுப்பினர்களை நியமிக்கும் பொறுப்பை அரசியலமைப்பு பேரவை தவறிவிட்டுள்ளதாக பாராளுமன்ற உறுப்பினர் மஹிந்தானந்த அளுத்மகே முன்வைத்த குற்றச்சாட்டு தொடர்பில் பதிலளிக்கும் போதே அமைச்சர் இவ்வாறு கூறினார்.

பாராளுமன்றத்தில் விசேட கூற்றொன்றை முன்வைத்து உரையாற்றிய நீதி அமைச்சர், ஊழல் - ஒழிப்பு சட்டமூலத்திற்கு எதிராக சட்ட நடவடிக்கை எடுப்பதற்காக பதவி உயர்வு மற்றும் இலஞ்சத்தை பெற்றுள்ள இலஞ்ச - ஊழல் ஆணைக்குழுவின் ஆணையாளர் ஒருவர் குறித்த சட்டத்தை சவாலுக்கு உட்படுத்தி உயர் நீதிமன்றில் வழக்கொன்றை தாக்கல் செய்துள்ளார்.

இலஞ்ச-ஊழல் ஆணைக்குழுவின் உறுப்பினர்கள் அரசியலமைப்பு சபைக்கு கடிதம் எழுதி, சபையின் பத்து உறுப்பினர்களையும் அச்சுறுத்தியுள்ளனர்.

இலஞ்ச - ஊழல் ஆணைக்குழுவின் உறுப்பினர்கள் எவ்வாறு அரசியலமைப்பு சபையை அச்சுறுத்த முடியும்?. அரசியலமைப்பு சபையை அவமதிக்கும் நோக்கம் எனக்கு இல்லை.

அரசியலமைப்புச் சபை உருவாக அடித்தளமிட்டது நானே. இலஞ்ச-ஊழல் ஆணைக்குழுவின் ஆணையாளர்கள் தன்னிச்சையாக செயற்படமுடியாது. குறித்த சட்டம் செப்டெம்பர் மாதம் 15ஆம் திகதி முதல் அமுல்படுத்தப்பட்டுள்ளதுடன், அவர்கள் தற்காலிகமாகவே பதவி வகிக்க முடியும்.

ஊழல் ஒழிப்பு சட்டமூலத்தில் தமக்கு நியமனங்களை வழங்க அதிகாரங்கள் உள்ளதாக கூறுகின்றனர். அவ்வாறு எவ்வித அதிகாரங்களும் இல்லை. 21ஆவது திருத்தச்சட்டம் கடந்த ஆண்டு ஒக்டோபர் 31ஆம் திகதிமுதல் அமுல்படுத்தப்பட்டுள்ளதால் இவற்றுக்கான நியமனங்களை வழங்கும் அதிகாரம் அரசியலமைப்பு சபைக்கே உள்ளது. ஊழல் ஒழிப்பு சட்டமூலத்துக்கு எதிராக செயற்படும் நோக்கில் ஆணைக்குழுவின் மூன்று ஆணையாளர்கள் இலஞ்சம் பெற்றுள்ளனர்" என்றும் அவர் கூறினார்.

### புதிய ஊழல் சட்டவிரோத சட்டம்:நீங்கள் தெரிந்து கொள்ள வேண்டிய விடயங்கள் என்ன?

புதிய ஊழல் தடுப்புச் சட்டத்தின் விதிகள் 2023ஆம் ஆண்டு செப்டெம்பர் 15ஆம் திகதி முதல் அமுல்படுத்தப்பட்டுள்ளது.

இது தொடர்பான விஷேட வர்த்தமானி அறிவித்தல் நீதி, சிறைச்சாலை விவகாரங்கள் மற்றும் அரசியலமைப்பு மறுசீரமைப்பு அமைச்சர் விஜேதாச ராஜபக்ஷவினால் கடந்த செப்டம்பர் 9ஆம் திகதி வெளியிடப்பட்டது. ஊழல் தடுப்பு மசோதா கடந்த ஜுலை 19ஆம் திகதி பாராளுமன்றத்தில் திருத்தங்களுடன் நிறைவேற்றப்பட்டது.

இது கடந்த கால ஊழல்களையும் விசாரிக்கும் வகையில் கொண்டு வரப்பட வேண்டும் என்றும், இங்கிருந்து வெளிநாட்டுக்குக் கொண்டு செல்லப்பட்ட திருடப்பட்ட செல்வத்தை மீண்டும் இந்த நாட்டிற்கு கொண்டு வர வேண்டும் என்ற விடயத்தை எதிர்க்கட்சிகள் முன்வைத்திருந்தன.

ஊழலுக்கு எதிராக இலங்கையில் ஏற்கனவே சட்டங்களும் இருக்கும் போது புதிய ஊழல் எதிர்ப்புச் சட்டத்தை கொண்டு வருவதன் நோக்கம் என்ன? அதைப் பற்றிப் பார்போம். (தொடரும்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## காக்கைகளும்...

ரோத்தடையச் செய்தவர்கள் யார் என்பதை நீதிமன்றம் வெளிப்படுத்தி விட்டது என்றும் அவர் கூறினார்.

பியகம பிரதேசத்தில் இடம்பெற்ற மக்கள் சந்திப்பில் கலந்து கொண்டு உரையாற்றும்போதே எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ மேற்கண்டவாறு கூறினார்.

"நாட்டில் வறுமைபட்ட மக்கள் தொகை 30 இலட்சத்திலிருந்து 70 இலட்சமாக அதிகரித்திருக்கும் நேரத்தில், வறிய மக்களுக்கு நிவாரணம் வழங்குவதற்கான முறையான வேலைத் திட்டம் எதுவும் அரசாங்கத்திடம் இல்லை.

தேர்தலின்போது மக்களுக்கு அதிகாரம் வழங்கப்படுவதாக கூறப்பட்டாலும், ஆட்சிக்கு வந்த பின் அரசியல்வாதிகளே தீர்மானங்களை எடுக்கின்றனர்.

இந்நிலையை மாற்ற வேண்டிய தருணம் வந்துள்ளது. கிராமத்திலும் நகரத்திலும் முடிவெடுக்கும் அதிகாரத்தை இளைஞர்களுக்கு வழங்குவதே ஐக்கிய மக்கள் சக்தி அரசாங்கத்தின் இலக்கு.

ஐக்கிய மக்கள் சக்தி அரசாங்கத்தில் இளைஞர்களுக்கும் பெண்களுக்கும் முடிவெடுக்கும் உரிமை வழங்கப்படும். நாட்டில் சிறுவயது முதலே கல்வியை மேம்படுத்த வேண்டும்.

பிரபஞ்சம் மற்றும் மூச்சுத் திட்டங்களை எதிர்க்கட்சி செயற்படுத்திய போது அரசாங்கம் சேறுபூசும் செயற்பாடுகளை முன்னெடுத்தாலும், ஐக்கிய மக்கள் சக்திக்கு கிடைத்த ஒவ்வொரு நிதியும் வங்குரோத்து நிலையில் உள்ள நாட்டின் சுகாதாரம் மற்றும் கல்வி முறையை மேம்படுத்தவே பயன்படுத்துகிறது" எனவும் எதிர்க்கட்சித் தலைவர் அங்கு தெரிவித்தார். (ந-7)

## மட்டுவிலில்...

வேலை குறித்த இளைஞனை பொலிஸார் மடக்கிப் பிடித்து கைது செய்தனர்.

21 வயதான மேற்படி சந்தேகநபரிடம் சாவகச்சேரி பொலிஸார் விசாரணைகளை முன்னெடுத்து வருவதோடு சந்தேகநபரை நீதிமன்றில் முற்படுத்துவதற்கான நடவடிக்கைகளையும் மேற்கொண்டுள்ளனர். (ந-7)

## அனுமதியற்ற...

அடையாளப்படுத்தப்பட்டுள்ள நிலையில் குறிப்பாக வடிகால்களில் நீர் தேங்கி நிற்பதால் நுளம்புப் பெருக்கம் அதிகரிப்பதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதனைக் கருத்தில் கொண்டு குறித்த வடிகால்களை சுத்தப்படுத்துவதோடு, வீதி ஓரங்களில் அமைக்கப்பட்ட அனுமதியற்ற நடைபாதை வியாபார நிலையங்களை உடனடியாக அப்புறப்படுத்துமாறும் பொலிஸாருக்கு ஆளுநர் அறிவுறுத்தல் விடுத்துள்ளார்.

இந்த விடயம் தொடர்பில் உடன் அமுலாகும் வகையில் நடவடிக்கை எடுக்குமாறு ஆளுநரின் செயலாளர் மு.நந்தகோபாலன் ஊடாக வடக்கு மாகாண சிரேஷ்ட பிரதிப் பொலிஸ் மா அதிபருக்கு கடிதம் அனுப்பப்பட்டுள்ளது.

இந்தச் செயற்பாடுகளுக்கு பூரண ஒத்துழைப்பை வழங்குமாறு சுகாதாரத் தரப்பினர், உள்ளூராட்சி ஆணையாளர் மற்றும் மாவட்ட அரசாங்க அதிபர் ஆகியோருக்கும் ஆளுநர் ஆலோசனை வழங்கியுள்ளார்.

மறுஅறிவித்தல் வழங்கப்படும் வரை யாழ்.மாவட்டத்தில் காணப்படும் அனுமதி அற்ற நடைபாதை வியாபார நிலையங்களை அகற்றுமாறும் ஆளுநர் பி.எஸ்.எம்.சார்ள்ஸ் பணிப்புரை விடுத்துள்ளார். (ந-7,33)

## ஜனாதிபதித்...

வகையில் முதலில் ஜனாதிபதி தேர்தலை நடத்த ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தீர்மானித்துள்ளார்.

கடந்த நாட்களில் அரசாங்கத்திற்குள் ஓர் அணி முதலில் ஜனாதிபதி தேர்தலை நடத்த வேண்டும் என கூறி வந்ததுடன் மேலும் ஓர் அணியினர் முதலில் பொதுத் தேர்தல் நடத்தப்பட வேண்டும் என தெரிவித்திருந்தனர்.

இதனடிப்படையில் அடிக்கடி ஜனாதிபதியை சந்தித்த இரண்டு அணியினரும் குறித்த தேர்தல்கள் தொடர்பில் தொடர்ந்தும் வலியுறுத்தி வந்தனர்.

இந்த நிலையில், தனது இறுதி முடிவை அறிவித்துள்ள ஜனாதிபதி அடுத்த ஆண்டில் முதலில் ஜனாதிபதித் தேர்தலை நடத்தவுள்ளதாகவும் அதன் பின்னர் பொதுத் தேர்தல் மற்றும் ஏனைய தேர்தல்கள் நடத்தப்படும் எனவும் தெரிவித்துள்ளார். (ந-7)

## வலுப்பெறுகிறது...

நான்கு உறுப்பினர்கள் ஐக்கிய மக்கள் சக்தியில் இணையவுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

பேராசிரியர் ஜி.எல்.பீரிஸ், கலாநிதி நாலக கொடஹேவா, பேராசிரியர் சன்ன ஜயசுமண, டிலான் பெரேரா ஆகியோர் ஐக்கிய மக்கள் சக்தியில் இணையவுள்ளதாக வெளியான தகவலையடுத்து கொழும்பு அரசியல் களம் சூடுபிடித்துள்ளது.

இது தொடர்பில் நேற்றையை தினம் கருத்துரைத்த பேராசிரியர் ஜி.எல். பீரிஸ் ஐக்கிய மக்கள் சக்தியுடன் இணைந்து பரந்துபட்ட கூட்டணியை உருவாக்கவுள்ளதாகவும் ஆபத்தான பொருளாதாரக் கொள்கையில் இருந்து மக்களைப் காப்பதே தமது நோக்கம் என்றும் தெரிவித்தார்.

---

ஆளும் கட்சியை பிரதிநிதித்துவப்படுத்தும் சுமார் 25 பாராளுமன்ற உறுப்பினர்கள் எதிர்காலத்தில் ஐக்கிய மக்கள் சக்தி கட்சியில் இணையத் தீர்மானித்துள்ளதாக முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் சுஜீவ சேனசிங்க தெரிவித்துள்ளார்.

இவர்கள் கடந்த பொதுத் தேர்தலில் ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவில் போட்டியிட்டு பாராளுமன்றத்திற்கு தெரிவானதாக அவர் குறிப்பிட்டுள்ளார்.

இந்த குழுவுடன் கூட்டு எதிர்க்கட்சியாகவும் எதிர்காலத்தில் அரசியல் கூட்டமைப்பாகவும் இணைந்து செயற்படுவது தொடர்பில் கலந்துரையாடியுள்ளதாகவும் அவர் மேலும் குறிப்பிட்டுள்ளார்.

இதேவேளை ஜனாதிபதி தேர்தலுக்கான புதிய கூட்டணியின் ஜனாதிபதி வேட்பாளராக சஜித் பிரேமதாஸவை நியமிப்பது தொடர்பில் கலந்துரையாடப்பட்டுள்ளதாகவும் அவர் தெரிவித்துள்ளார். (ந-7)

## சரிகமப...

யாக நடைபெறும் சரிகமப இசை நிகழ்ச்சி உலகத் தமிழ் மக்கள் மத்தியில் மிகப் பெரும் வரவேற்பைப் பெற்றிருந்தது.

இந்நிகழ்ச்சியில் யாழ்ப்பாணம் அரியாலையைச் சேர்ந்த சுண்டுக்குளி மகளிர் கல்லூரியில் தரம் 9இல் கல்வி கற்கும் மாணவி உதயசீலன் கில்மிசா பங்குபற்றி இசை வல்லுநர்களையே அதிசயக்க வைக்கும் வகையில் பாடல்களைப் பாடி நடுவர்களதும் இரசிகர்களதும் அமோக ஆதரவைப் பெற்றிருந்தார்.

நேற்று (17) நடந்த இறுதிப் போட்டியின்போது செல்வி கில்மிசா உலகத் தமிழ் இரசிகர்களின் 46 சதவீதமான வாக்குகளைப் பெற்று முதல் இடத்துக்குத் தெரிவாகி வெற்றி வாகை சூடி மகுடம் தரித்தார்.

கில்மிசாவின் வெற்றி அறிவிக்கப்பட்டதும் உலகத் தமிழ் மக்கள் மகிழ்ச்சி அடைந்தனர். (ந-7)


லக்கி 7 VIP
திகதி 2023.12.17
சீட்டிழுப்பு இலக்கம் 0157
P 4 6 4 0 6 1 P
தேசிய லொத்தர் சபை

தன நிதானய
திகதி - 2023.12.17
சீட்டிழுப்பு இலக்கம் - 1361
C 02 17 49 54 C
Double Chance 17804

கொவிசெத
சீட்டிழுப்பு இலக்கம் 3573
சீட்டிழுப்பு திகதி 17.12.2023
Q 14 49 57 59
Q 10239
தேசிய லொத்தர் சபை

HANDAHANA
உத்தியோகபூர்வ முடிவுகள்
சீட்டிழுப்பு திகதி 2023.12.17
சீட்டிழுப்பு இலக்கம் 0640
சிம்மம் 03 36 38 39 சிம்மம்
45222 28

மஹஜன சம்பத
திகதி 2023/12/17
சீட்டிழுப்பு இலக்கம் 5331
K 5 7 6 7 9 6
தேசிய லொத்தர் சபை

மெகா பவர்
திகதி 17/12/2023
சீட்டிழுப்பு இலக்கம் 1679
R 24 18 31 36 65
71367

உத்தியோகபூர்வ முடிவுகள்
சுப்பிரி தன சம்பத
17.12.2023 வெற்றி வாரம் 039
G 1 7 1 3 1 6
65786
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ. 24,126,683.20
DLB தொலை பேசி: 011-2 333 546-47 Web: www.dlb.lk
வெற்றி பெற்ற டிக்கட்டுக்கள் 6 மாதங்களுக்கு செல்லுபடியாகும்.

SUPER BALL
சீட்டிழுப்பு வாரம் 2305 வர்ணம் செம்மஞ்சள்
சீட்டிழுப்பு திகதி 2023.12.17 தினம் ஞாயிற்றுக்கிழமை
24 42 57 69 W
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ. 61,938,068/-
62915

சனிதா
திகதி 2023.12.17 வெற்றி வாரம் 4466
28 46 61 64 Z
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ. 67,130,840.00
30315

சசிரி
வெற்றி வாரம் 416
சீட்டிழுப்பு திகதி 2023.12.17
கபிலம்
13 20 24
வெல்லப்பட்ட மொத்தப் பரிசுத் தொகை ரூ. 1,833,880/-

ராசி
சீட்டிழுப்பு வாரம் 4017 வர்ணம் ஊதா
சீட்டிழுப்பு திகதி 2023.12.17 தினம் ஞாயிற்றுக்கிழமை
27 28 30 40 மிதுனம்
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ. 7,056,340/-
539995

ஆங்கில எழுத்து, சுப்பர் இலக்கம் மற்றும் வெற்றி இலக்கம்
F 23 06 42 44 67
1481 மஞ்சள் 2023.12.17 ஞாயிறு
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ. 478,674,604.20
DLB 6 மாதங்களுக்கு செல்லுபடியாகும்.

ADA KOTIPATHI
ஞாயிற்றுக்கிழமை
வெற்றி வாரம்: 2131
சீட்டிழுப்பு திகதி: 2023.12.17
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ.76,775,000/-
16 36 70 76 W
755837


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தரம் - 10 (2024)
ENGLISH LITERATURE
by P.THARMAKUMARAN (P.Mathan)
BA(Eng.Lit), Dip.in.Eng, SLTES
NEWTON GROUP CLASSES
No.18/18, Wyman Road, Nallur.
☎-077 792 3653
(18260)

## இலங்கைக்கு உதவ இந்தியா யாருக்காகவும் காத்திருக்கவில்லை

# தனது சேவைக்காலம் தொடர்பில் மனம் திறந்தார் கோபால் பாக்லே

(கொழும்பு)

இலங்கையின் பொருளாதார - அரசியல் ஸ்திரதன்மை என்பது இந்தியாவுக்கு மாத்திரமல்ல, பிராந்திய நலன்களுக்கும் மிகவும் அவசியமான ஒன்றாகும். இலங்கை போன்ற நட்பு நாடொன்று நெருக்கடிகளை எதிர் கொள்ளும்போது அதன் தாக்கம் நிச்சயம் பிராந்தியத்திலும்இருக்கும்எனத் தெரிவித்துள்ள இந்திய உயர்ஸ்தானிகர் கோபால் பாக்லே, இரு நாடுகளுக்கு மிடையிலான சுற்றுலா, தகவல் தொழில்நுட்ப மற்றும் வலு சக்தி உள்ளிட்ட புதிய இணைப்புகளினால் இலங்கை நலனடையும் எனவும் குறிப்பிட்டுள்ளார்.

இலங்கை - இந்திய உறவு என்பது பொருளாதாரத்தை மாத்திரம் சார்ந்த தல்ல. மாறாகக் கலாசாரப் பின்னணிகள், இரு நாட்டு மக்கள் தொடர்புகள் மற்றும் பாதுகாப்பு எனப் பல்துறை சார்ந்தது.

இலங்கையில் மூன்று ஆண்டு கால இந்திய இராஜதந்திர சேவையைக் கடந்த 15ஆம் திகதியுடன் நிறைவு செய்துள்ள உயர்ஸ்தானிகர் கோபால் பாக்லே, அவுஸ்திரேலியாவுக்கான இந்திய உயர்ஸ்தானிகராக சேவையில் இணையவுள்ளார். இந்நிலையில், இலங்கையின் தனது சேவைக்காலம் குறித்து கருத்து தெரிவிக்கையிலேயே கோபால் பாக்லே மேற்கண்டவாறு தெரிவித்தார். (ந-7)

வங்கியில் அடகு வைத்த நகைகளை மீட்க முடியவில்லையா? நாம் மீட்டுத்தருகின்றோம்
ஆகாஸ் நகை மாடம்
யாழ்ப்பாணம், நெல்லியடி, பருத்தித்துறை, சாவகச்சேரி, கொடிகாமம், கிளிநொச்சி, மானிப்பாய், சுன்னாகம், அச்சுவேலி, சங்கானை வல்வெட்டித்துறை, உடுப்பிட்டி, காரைநகர், வவுனியா, மன்னார் ஆகிய பகுதிகளில்
வங்கியில் அடகு வைக்கப்பட்ட அடகு நகைகளை நகைக்கேற்ப பெறுமதியைப் பார்த்து வங்கியிலேயே பணத்தைத் தந்து வாங்கப்படும். (18242)
076 825 7716 (ஆகாஸ்)

விசா விண்ணப்பம்
சுவிஸ் கனடா பிரான்ஸ் லண்டன் இத்தாலி சுவிடன்
ஆகிய நாடுகளுக்கு விசிட் விசா, பொன்சர் விசா மற்றும் வேலைவாய்ப்பு விசாக்கள் ஆகிய விசாக்கள் பெற்றுத் தரப்படும். ஆர்வமுள்ளவர்கள் தொடர்பு கொள்ளவும்.
அனைத்து நாடுகளுக்குமான Online பதிவுகள் பெற்றுத் தரப்படும் Visa விண்ணப்பங்களும் Online மூலம் பூர்த்தி செய்யப்படும்.
ஆர்வமுள்ளவர்கள் தொடர்பு கொள்ளவும்.
வேலைவாய்ப்பு விசாக்கள் பெற்றுத்தரப்படும்.
உங்களிடம் கனடா நாட்டிற்கான பொன்சர் இல்லையா? கவலையை விடுங்கள் அதை எம்மிடமே பெற்றுக்கொள்ளலாம்.
தொலைபேசியில் தகவல்கள் வழங்கப்படமாட்டாது.
NSA Group of Company (Pvt) Ltd.
131, Main Street, Jaffna. (18270)
077 266 6429, 021 221 0599, 077 877 4838
குறிப்பிட்ட பொன்சர் மாத்திரமே கையிருப்பில் உள்ளன.

CANADA
VISITOR VISA
VISITOR VISA வில் கனடா செல்வதற்குரிய ஆலோசனைகள் மற்றும் Online விண்ணப்பங்கள் விரைவாக செய்து தரப்படும்
CIMS COLLEGE (C-7929)
0777-068-777
49A, சப்பல் லேன், யாழ்ப்பாணம்
V2 TRAVELS

உடனடி வேலை வாய்ப்பு
நிர்வாக உத்தியோகத்தர்
விமானப் பயணச்சீட்டுக்கள்
விரைவுப் பொதிகள் சேவை
விசா சேவைகள்
V2 TRAVELS (C-7929)
எமது கிளைகள்
• கிளிநொச்சி • சுன்னாகம்
• சாவகச்சேரி • மானிப்பாய்
• நெல்லியடி • பருத்தித்துறை
• திருகோணமலை • வல்வெட்டித்துறை
• கோப்பாய் • புத்தூர்
• பண்டத்தரிப்பு • சங்கானை
• கொழும்பு
வயது :-30 வயதிற்குட்பட்டோர் (இருபாலாரும்)
அனுபவமுள்ளவர்களுக்கு முன்னுரிமை வழங்கப்படும்
சம்பளம் - 30'000/-
பயிற்சியின்போது - 25'000/-
0777-068-777
v2vacancies@gmail.com


தையல் மெஷின் தேவை
பாவித்த சிங்கர் தையல் மெஷின் (கறுப்பு மெஷின் மட்டும்) தேவை. விற்க விரும்புவோர் தொடர்புகொள்ளவும். (18243)
070 535 4101

A/L 2025, 2024
ஊடகக் கல்வி (Media)
வகுப்புக்கள் நடைபெறுகின்றன.
Y.Kones (C-7928)
077 644 6514

விரைவு பொதிகள் சேவை
DHL
வெளிநாடுகளுக்கான விரைவு பொதிகள் சேவை 3 - 5 நாட்களுக்குள் வழங்கப்படுகின்றன. (18233)
Lanka Cargo Worldwide Express
பணியாளர் தேவை
இல. 315, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.
070 375 0002

Canada and Italy Visa
(Canada, Italy, UK, USA) Work visa, Visitor visa, students visa & business visa செய்து தரப்படும். மேலும் சகல நாடுகளுக்கான விசா விண்ணப்ப ஏற்பாடுகள் செய்து தரப்படும்.
பணியாளர் தேவை
VISA CONSULTANT (18234)
134, Adiyapatham Road, Thirunelvely, Jaffna.
077 038 5584

## மூன்றாம் ஆண்டு நினைவஞ்சலி



தோற்றம் 17 . 10 . 1949

மறைவு 20 . 12 . 2020


அமரர் சோமசுந்தரம் புவனசுந்தரம்

திதி : சஷ்டி

ஆலமரமொன்று அடிசாய்ந்ததோ - வேரோடி
விழுது விட்டபெரு விருட்சமே எமை - பாரோடு
தவிக்கவிட்டு பாதியிலே போனதேனோ
மூன்றாண்டுகள் ஓடி மறைந்தாலும்
உங்கள் உயிர்மூச்சு மறைவதில்லை.
என்றென்றும் உங்கள் நினைவுகளுடன்
ஆத்ம சாந்திக்காக பிரார்த்திப்போம்.
ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!

நாகலிங்கம் வீதி,
கொக்குவில் மேற்கு,
கொக்குவில். (18271)

குடும்பத்தினர்

விற்பனைக்கு


KORD, KORA
அச்சு இயந்திரங்கள் விற்பனைக்கு
தொடர்புகளுக்கு
076 097 3121

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்பத்திரிகை வலம்புரி நியூஸ் பேப்பர் (பிறைவேற்) லிமிடெட் ஸ்தாபனத்தாரால் இல. 181, பிறவுண் வீதி, யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 18.12.2023 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.